# பாட்டாளி சிந்தனை

Volume 29 No. 1

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

September 2018

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்
## மாசேதுங் அவர்களுக்கு செவ்வணக்கம்

“ஒரு புரட்சிகரக் கூட்டமைப்பில் தாராளவாதம் என்பது மிகப்பெரும் சேதத்தை விளைவிக்கக்கூடியது. அரித்துத்தின்னக்கூடியதாகிய அது ஒற்றுமையை அழித்தொழித்து, ஒத்திசைவை தரம் தாழ்த்தி, அக்கறையின்மையை ஏற்படுத்தி, கருத்து வேறுபாடுகளை உருவாக்கிவிடும். கட்டுக்கோப்பான அமைப்பின் புரட்சிகர அணிகளையும் கடுமையான ஒழுக்கத்தையும் இழக்கச் செய்துவிடுகிறது. கொள்கைகள் நிறைவேற்றப்படுவதை தடுப்பதுடன் கட்சி வழிநடத்தக்கூடிய வெகுஜனங்களிடமிருந்து கட்சி அமைப்புகளை அந்நியப்படுத்திவிடுகிறது. இது ஓர் மிகவும் மோசமான போக்காகும். தாராளவாதமென்பது குட்டி முதலாளித்துவ சுயநலவாதத்திலிருந்து உருவாகிறது. அது தனிப்பட்ட நலன்களை முதன்மையாகவும் புரட்சியின் நலன்களை இரண்டாவதாகவும் வைக்கின்றது. இவ்வாறாக அது சித்தாந்த ரீதியிலான, அரசியல் ரீதியிலான மற்றும் அமைப்பு ரீதியிலான தாராளவாதத்திற்கு வழிவகுக்கிறது. தாராளவாதிகளாக இருப்பவர்கள் மார்க்சியக் கோட்பாடுகளை நடைமுறைக்கு ஒவ்வாத வறட்டுவாதமாகப் பார்க்கின்றனர். அவர்கள் மார்க்சிசத்தை சரியென ஏற்றுக்கொள்கின்றனர், ஆனால் அதனை நடைமுறைப்படுத்தத் தயாராயில்லை, அல்லது முழுமையாக நடைமுறைப்படுத்தத் தயாராயில்லை. அவர்களின் தாராளவாதத்திற்குப் பதிலாக மார்க்சிசத்தை நடைமுறைப்படுத்திட அவர்கள் தயாராக இல்லை ... தாராளவாதம் என்பது சந்தர்ப்பவாதத்தின் வெளிப்பாடாகும், அது மார்க்சிசத்துடன் அடிப்படையில் ஒத்துப்போகாதது. இது எதிர்மறையானதும் யதார்த்தத்தில் எதிரிக்கு உதவிக்கொண்டிருக்கும் விளைவைக் கொண்டுள்ளதுமாகும். அதனால்தான் இது நம் மத்தியில் அப்படியே இருப்பதை எதிரிகள் வரவேற்கின்றனர். அதன் இயல்பு இவ்வாறாயிருக்கையில், புரட்சியின் அணிகளில் அதற்கு இடமே இருக்கக்கூடாது.”

*(தாராளவாதத்தை முறியடியுங்கள், 7 செப்டம்பர், 1937)*



*26 செப்டம்பர் 1893 – 9 செப்டம்பர் 1976*

## தோழர் பிரவாஸ் கோஷ் அவர்களின் அறைகூவல்

# கட்சியின் 3வது காங்கிரஸை வெற்றிபெறச் செய்வோம்!

*(பொதுச் செயலாளர், தோழர் பிரவாஸ் கோஷ் அவர்களின் வேண்டுகோள் அனைத்து மட்டத் தோழர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்)*

சில முன்னணித் தோழர்கள் சில நாட்கள் முன்பு 3வது கட்சிக் காங்கிரஸை வெற்றிபெறச் செய்ய ஒரு வேண்டுகோள் விடுக்கும்படி என்னைக் கோரினர். இந்தக் கட்சிக் காங்கிரசின் தேவைகுறித்து கட்சியின் ஒருபகுதித் தோழர்களுக்கு போதுமான தெளிவான புரிதல் இல்லை என்று அந்த முன்னணித் தோழர்கள் நினைக்கிறார்கள். பெருமளவிலான தோழர்களும் கட்சிக் கிளைகளும் மிகுந்த ஈடுபாட்டுடன் செயலாற்றிவரும் சூழலில் அந்தத் தோழர்களின் வேண்டுகோளுக்கு நான் தாமதமாகவே வினையாற்றுகிறேன். இருப்பினும் அந்த முன்னணித் தோழர்களின் உணர்வுகளையும் கருத்துக்களையும் கணக்கிலெடுத்துக்கொண்டு நான் சிலவற்றைக் கூறமுடிவு செய்துள்ளேன். கீழ்க்கண்ட காரணங்களை சுருக்கமாக முன்வைக்கிறேன்.

1) முந்தைய கட்சிக் காங்கிரஸினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படைப் பாதையின் பெரும் பகுதி இன்னும் பொருத்தப்பாடுடையதாக இருக்கிறது. மேலும் கடைசியாக நடைபெற்ற காங்கிரஸுக்குப் பின்னர் அடிப்படை மாற்றங்கள் எதுவும் சர்வதேச, தேசிய சூழ்நிலைகளில் ஏற்பட்டுவிடவில்லை. ஆனால் இடைக்காலத்தில் சில குறிப்பிடத்தக்க முக்கிய வளர்ச்சிகளை நாம் உற்றுநோக்க முடிகிறது. இவை குறித்த கட்சியின் சிந்தனை நடைமுறைச் செயல்பாட்டு மரபுகளின் அடிப்படையில் ஆழமான விவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்கள் பல்வேறு மட்டங்களில் தேவைப் படுகிறது. மேலும் அவை கட்சிக் காங்கிரஸில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு இறுதியில் ஒருமித்த புரிதலுக்குக்கொண்டு வரப்படுவதன்மூலம் கட்சியின் ஆய்வு நிகழ்காலச் சூழலை எதிர் கொள்வதற்குகந்ததாகச் செழுமைப் படுத்தப்படும்.

2) சுரண்டி அடக்கி ஒடுக்கும் இந்த முதலாளித்துவச் சுரண்டல் அமைப்புமுறையாலும் அதன் ஏவலாட்களாலும் அதாவது ஆளும் முதலாளித்துவ கட்சிகளின் நடவடிக்கைகளாலும் சிக்கலாக்கப்பட்ட மேலும் சிக்கலுக்குள்ளாக்கப்பட்டு வரும் பொருளாதார, அரசியல், கலாச்சார நெருக் கடிகளாலும் நாடு மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது.

பல இலட்சம் இளைஞர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான தொழி லாளர்கள் வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டு வருகின்றனர். லட்சோபலட்சம் மக்கள் உணவோ, மருந்தோஇன்றி செத்து மடிகின்றனர். தற்கொலை செய்துகொள்கின்றனர். சதைஇச்சைச் சந்தையில் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கில் பெண்களும் குழந்தைகளும் விற்கப்பட்டுவருகின்றனர். ஒவ்வொரு நிமிடமும் வயதானவர்கள், சிறுமிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான வன்புணர்வு, கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டு கொலைசெய்யப்படுகின்றனர். வரிகள், விலைகள் தொடர்ந்து அதிகரித்தவண்ணம் உள்ளது. பரந்துபட்ட ஊழல், பொதுப்பணத்தைக் கொள்ளையடித்தல் மற்றும் கல்வி, சுகாதாரத்திற்கு நிதி அதிகரிப்பதற்குப்பதிலாக இராணுவ பட்ஜெட்டுக்கு நிதி உயர்த்தப்படுகிறது.

விலைஉயர்வு, வரிஉயர்வு, ஊழல், பொதுச் சொத்து கபளீகரம் செய்யப்படல், கல்வி, மருத்துவத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் வெட்டு, இராணுவத்துக்கான கூடுதல் நிதிஒதுக்கீடு ஆகியவை தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

இந்து மதஅடிப்படைவாதம், பழைமைவாதம் (Obscurantism), தேசிய வெறியுணர்வுவாதம், சாதியவாதம், வகுப்புவாத–சாதியவாத வெறுப் புணர்வுகள் இடைவிடாமல் தூண்டிவிடப்பட்டும், கலவரங்கள் திட்டமிடப்பட்டும், கல்வி காவிமய மாக்கப்பட்டும் மத நம்பிக்கைகளின் அடிப்படை யில் மக்கள் பிளவுபடுத்தப்பட்டும் ஜனநாயக நிறுவனங்களின் மிச்ச சொச்சங்களும்கூட அழித் தொழிக்கப்பட்டும் வருகின்றன. இவையனைத்தும் வாக்கு வங்கிகளை உருவாக்கும் நோக்கத்தையும் பண, அடியாள், ஊடக மற்றும் நிர்வாக சக்தியின் உதவியுடன் தேர்தலை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு அதை அப்பட்டமான ஏமாற்று வேலையாக தரம் தாழ்த்தும் நோக்கத்தையும் இந்நாட்டில் பாசிசத்தை முன்னெடுத்துச்செல்லும் நோக்கத்தையும் கொண்டிருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒழுக்க விழுமியங்கள் மறுமலர்ச்சிக்கால விடுதலைப் போராட்டப் பாரம்பரியங்கள் ஆகியவை சிதைப்பு, சீர்குலைப்புக் களின் மூலம் மாணவர்கள்–இளைஞர்களின் மானுடத்தன்மையே வேரறுக்கப்படுகிறது. இவையனைத்தும் நாட்டை அழிவுப்பள்ளத்தின் விளிம்பிற்கு கொண்டுசென்றுள்ளது. நாட்டின் இருபெரும் தேசியக் கட்சிகளான காங்கிரஸும் பாஜகவும் இதர பிராந்திய முதலாளித்துவ கட்சிகளும் அமைச்சர்களாக அரசியல் மேலாளர் களாக பணியாற்றுவதற்காக ஆளும் முதலாளித்துவ ஆதரவைப்பெற ஒருவரோடொருவர் போட்டியிடு வதில் எவ்வித ஆச்சரியமுமில்லை.

ஆட்சி அதிகாரத்திலிருந்தாலும் எதிர்க்கட்சி வரிசையிலமர்ந்தாலும் எப்போதும் அவர்களது இலக்கு இதுவே. ஆட்சியதிகாரத்திலிருக்கும்போது தங்களின் எஜமானர்களை திருப்திசெய்யும் விதமாக முதலாளித்துவ சுரண்டலை நீட்டிக் கின்றனர். அனைத்து எதிர்ப்புக்குரல்களையும் மக்களின் போராட்டங்களையும் மிருகத்தனமாக அடக்கிஒடுக்குகின்றனர். எதிர்க்கட்சியாக திகழும்போது மக்களின் இன்னல்களைக்கண்டு முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர். இது மக்களை ஏமாற்றவும் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான தளத்தை உருவாக்கும் போக்கிலேயே செய்யப் படுகிறது. இத்தகைய அனைத்து நடவடிக்கை களாலும் மக்களின் வாயை அடைக்க இவர்களால் முடியவில்லை. வாழ்வின் தாங்கொணா எரியும்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## தோழர் பிரவாஸ் கோஷ் அவர்களின் அறைகூவல்

# கட்சியின் 3வது காங்கிரஸை வெற்றிபெறச் செய்வோம்...

1ம் பக்கத் தொடர்ச்சி

பிரச்சினைகள் அவர்களை எதிர்ப்பு முழக்கமிடும்படித் தள்ளுகின்றன. தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் பிற பகுதி பாடுபடும் மக்கள் மத்தியில் தேக்கிவைக்கப்பட்ட கோபம், மனத்தாங்கல், கண்டனங்கள் யாவும் தன்னிச்சையான, அமைப்புரீதியில் அல்லாத மற்றும் அரசியல் ரீதியில் விழிப்புணர்வற்ற திடீர் எதிர்ப்புப் போராட்டங்களாக, துப்பாக்கிக் குண்டுகளையும் லத்தியடிகளையும்கூடப் பொருட்படுத்தாமல் பெருமளவில் வெடித்துக் கிளம்புகின்றன. ஆனால் இத்தகைய போராட்டங்கள் சரியான அரசியல் தலைமை இல்லாததால் அவ்வப்போது தோன்றி மறைகின்றன. பெரிய இடதுசாரிக் கட்சிகள் என்று அறியப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை தங்களது சமூக ஜனநாயக இயல்புக்குகந்தபடி போர்குணமிக்கப் போராட்டப்பாதையைக் கைவிட்டு பாவனைப் போராட்டங்களில் ஈடுபடுவது ஏற்கெனவே வழக்கமாக மாறிவிட்டது.

தேர்தலில் வெற்றிகளை அறுவடைசெய்ய அவர்கள் “மதச்சார்பின்மை” என்ற பெருமுழக்கத்துடன் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் சேர்ந்துள்ளனர். இருப்பினும் அவர்களைப் போராட்டங்களில் ஈடுபடச்செய்து ஒன்றுபட்ட போராட்டங்களில் தக்கவைத்து, பயன்படுத்தியும் ஒற்றுமை–போராட்டம்–ஒற்றுமை எனும் கோட்பாட்டினடிப்படையில் அவர்களது பங்களிப்பை ஈடுபடுத்தச்செய்யும் நமது முனைப்புத் தொடரும். தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்திய மண்ணின் ஒரே உண்மையான புரட்சிகர பாட்டாளிவர்க்கக் கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை வலுப்படுத்துவதும் பரவலாக கொண்டு செல்வதை உறுதிப்படுத்துவதும் இந்தக் கணத்தின் அபயச் சங்கொலியாக உள்ளது.

இத்தகைய போராட்டங்கள் தர்க்கரீதியான முடிவை அடைவதற்குத் தேவையான சித்தாந்த, அரசியல், ஸ்தாபன, கலாச்சார தலைமையைக் கொடுக்கும் வல்லமையுள்ளதாக உருவெடுக்கும்.

இந்தத் தகுதியை, தரத்தை அடைவதற்கு தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் புரட்சிகரப் போதனைகளால் வழிநடத்தப்பட்ட உயிரோட்டமான போராட்டம் கட்சிக்குள் உடனடியாகத் தேவைப்படுகிறது. இத்தகைய உட்கட்சிப் போராட்டத்தினுள் அனைத்துத் தோழர்களையும் ஈடுபடுத்துவதற்கான தயாரிப்புக்காக கட்சி காங்கிரஸ் நடத்தப்படுகிறது.

*3)* உலக முதலாளித்துவம்–ஏகாதிபத்தியமானது இதுவரை கண்டிராத தொடர்ந்து தீவிரமடைந்துவரும் நெருக்கடியின் பிடியில் தவித்துக்கொண்டிருக்கிறது என்பதை கணக்கிலெடுத்துக்கொள்வது அவசியம். உலக சோசலிச சந்தை என்ற இணையான சந்தை இல்லாதிருக்கும் நிலையில்கூட உலக முதலாளித்துவம் தொடர்ச்சியான ‘சந்தை சுருக்க’த்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு துருவ உலகத்தின் “மகாபிரபு” என்று ஒருகாலத்தில் தம்மட்டமடித்துப் பிரகடனம்செய்த அமெரிக்கா, எதிர்ப்புரட்சிக்குப்பின்னர் இன்று முதலாளித்துவ நாடாக மாறிவிட்ட சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் சவால்களையும் ஐரோப்பிய யூனியன், ஜப்பான் ஆகிய நாடுகளின் சவால்களையும் எதிர்கொண்டு வருகின்றது. இந்நாடுகள் ஒவ்வொன்றும் மற்றவர்களின் சந்தையைக் கைப்பற்றுவதற்காக கழுத்தறுப்பு மோதல்களில் ஈடுபட்டுள்ளன. முன்னொரு காலத்தில் உலகப் பொருளாதாரத்தை இயக்கும் திறன்மிக்க வாகனமாக கருதப்பட்ட அமெரிக்கா தற்சமயம் கிட்டத்தட்ட மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பல் போலாகிவிட்டது. பிறநாடுகளின் சந்தைகளை ஆக்கிரமிப்பதற்காக அது முன்னர் உலகமயம் எனும் திட்டத்தை முன்மொழிந்தது. ஆனால், இதே உலகமயமாக்கல் திட்டத்தின் விதிமுறைகளைப் பின்பற்றி போட்டியாளர்களாக இருக்கும் பிற முதலாளித்துவ–ஏகாதிபத்திய சக்திகளால் தனது சொந்த உள்நாட்டுச் சந்தை அபகரிக்கப்பட்டிருப்பதை இதே அமெரிக்கா காண்கிறது. அதனால் அது உலகமயமாக்கலை நிராகரிக்கவும் அதற்குப் பதிலாக, ‘அமெரிக்கா முதலில்’ எனும் கோஷத்தை முன்வைத்து, இறக்குமதி வரிச்சுவரை உயர்த்தியிருக்கிறது. எதிர்பார்த்தவாறே சீனாவும் பிற நாடுகளும் பதிலடி நடவடிக்கைகளை எடுத்துள்ளன. இவ்வாறு உலகம் முழுவதுமாக வர்த்தகப்போர் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இந்த வர்த்தக யுத்தம் எங்குபோய் முடியும் என்பது மிகப்பெரிய கேள்வி. இதற்கு காலம்தான் பதில்சொல்லவேண்டும்.

மறுபுறம் இந்த ஏகாதிபத்திய நாடுகளெல்லாம் பின்னடைவு, தொழிற்சாலைகள் மூடப்படுதல், தொழிலாளர்கள் வேலையைவிட்டு அகற்றப்படுதல், வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் இவற்றோடு தொடர்புள்ள கடும் சிக்கல்களைத் தொடர்ச்சியாக சந்தித்துவருகின்றன. இது மக்கள் வாழ்க்கையை மேலும் துன்பத்திலாழ்த்தி வருகின்றது. இவையனைத்தும் இதுவரையில்லாத வகையில் வெகுஜனங்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தி, அவை தொழிலாளர்–மாணவர்களின் அலையலையான வேலைநிறுத்தங்களுக்கும் எண்ணற்ற சக்திவாய்ந்த மக்களின் போராட்ட இயக்கங்களுக்கும் இட்டுச் செல்கின்றன. ‘வால் ஸ்டிரீட் முற்றுகை, ‘அரபு வசந்தம்’ போன்ற எழுச்சிமிக்க இயக்கங்கள் வெடித்தெழுகின்றன. அவை மீண்டும் மீண்டும் எழும்பும். அத்தகைய சக்தி வாய்ந்த மக்கள் எழுச்சிகள் ஒரு சரியான புரட்சிகர பாட்டாளிவர்க்கத் தலைமை இல்லாததால், அவை மீண்டும் மீண்டும் பின்னடைவைச் சந்திக்கும்.

முன்னாள் சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சீனத்திலும் நடந்த எதிர்ப்புரட்சிக்குப் பின்னர், சோசலிசம் சிதைக்கப்பட்டது மட்டுமின்றி, ஒரு காலத்தில் ஏகாதிபத்திய–முதலாளித்துவ உலகை உலுக்கிய சக்திவாய்ந்த கம்யூனிச இயக்கமும் பெரும் பின்னடைவைச் சந்தித்தது எனும் உண்மையை தோழர்கள் அறிவார்கள். பல்வேறு உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் சோவியத், சீனத் தலைமையை குருட்டுத்தனமாக பின்பற்றியதாலும் அவை குறைந்த அளவிலான சித்தாந்த கலாச்சாரத் தரத்தை’ கொண்டிருந்ததாலும் நவீனத் திருத்தல்வாதம் விடுத்திருக்கும் பெரும் ஆபத்தை அவர்களால் புரிந்துகொள்ளவும், எதிர்ப்புரட்சி நடப்பதற்கு வழிவகுக்கும் பல்வேறு காரணங்களை கண்டுபிடிக்கவும் முடியவில்லை என்பதை தோழர் சிப்தாஸ் கோஷ் நீண்டகாலத்திற்கு முன்பே சுட்டிக்காட்டியுள்ளார். அதன்விளைவாக சோவியத் திருத்தல்வாதிகளின் சூழ்ச்சிகளால் சோசலிசம் தூக்கியெறியப்பட்டபோது இத்தகைய கம்யூனிஸ்ட் கட்சிகள் குழப்பத்தில், சித்தாந்த திவாலில் சிக்கி, விரக்தி, ஏமாற்றத்தின் காரணமாக செயலற்றவர்களாகி, இறுதியில் சிதறண்டு போனார்கள். தற்சமயம் பல்வேறு நாடுகளிலும் தங்களை கம்யூனிஸ்டுகள் என்று அழைத்துக்கொள்ளும் ஏராளமாக துண்டு சிறுகுழுக்கள் மற்றும் கட்சிகள் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவை யாவும் சித்தாந்தக் குழப்பத்தினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தற்போதைய சூழலில் பருண்மையான மார்க்சிய–லெனினிய புரிதல் இல்லாததால், லெனினிய முறையியலைப் பிரயோகித்து தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களால் செழுமைப்படுத்தப்பட்ட மார்க்சிய புரிதல்களுடன் கட்டியெழுப்பப்பட்ட நமது கட்சியாகிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மட்டுமே இந்த நெருக்கடியை சரியாக எதிர்கொள்ளமுடிந்தது. தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் சோசலிச அமைப்புக்குள்ளும் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் உள்முளைவிட்ட அபாயங்கள் குறித்து முன்னெச்சரிக்கை செய்ததோடு சூழ்நிலையை எதிர்கொள்வதற்குத் தேவையான வலிமையாக சித்தாந்த ஆயுதத்தையும் நமக்கு வழங்கினார். அவரது மதிப்புமிக்க வழிகாட்டுதல்களைப் பின்பற்றிய நமதுகட்சி இந்த நெருக்கடியினால் பாதிக்கப்படாததோடு மார்க்சிசம்–லெனினிசம் சிப்தாஸ் கோஷ் சிந்தனை மற்றும் பாட்டாளிவர்க்க சர்வதேசியம் எனும் உன்னதப்பதாகையை ஏந்தி நமது நாட்டில் வளர்ந்தும் விரிவடைந்தும் வருகிறது.

மாபெரும் மார்க்ஸ்–எங்கெல்ஸ் ஆகியோரால் உருவாக்கப்பட்ட இரண்டாவது அகிலம் முதல் உலகப்போருக்கு முன்பு சீரழிந்ததோடு மார்க்சிய புரட்சிகர உட்கருவை கைகழுவி திருத்தல்வாதிகளின் உறைவிடமாகவும் மாறிவிட்டதை நாம் நினைவில் நிறுத்தவேண்டியுள்ளது. அந்த நெருக்கடியான தருணத்தில் மாபெரும் லெனின் அவர்கள் தான் 2வது அகிலத்தின் திருத்தல்வாதத் தலைவர்களை சித்தாந்தபூர்வமாக தோல்வியுறச் செய்ததோடு மார்க்சிசத்தின் புரட்சிகர ஆன்மாவைப் பாதுகாத்து, அதன் போக்கில் மார்க்சியம் பற்றிய புரிதலை மேலும் செழுமைபடுத்தி, வளர்த்து முதலாளித்துவத்தின் புதிய மற்றும் உச்சக்கட்டமான ஏகாதிபத்திய காலகட்டத்தின் தேவைக்கேற்ப ஒரு புதிய உச்சிக்கு இட்டுச்சென்றார். இதைத்தான் மாபெரும் ஸ்டாலின் அவர்கள் லெனினியம் என்பது ஏகாதிபத்திய–பாட்டாளி வர்க்கப் புரட்சிக் காலக்கட்டத்தின் மார்க்சியம் என்று பெயரிட்டு வரையறை செய்தார். ”ரஷ்யாவில் இது பருண்மையாகப் பிரயோகிக்கப்பட்டு சோசலிசப் புரட்சி வெற்றியடைந்து சோவியத் யூனியன் உருவானது. தொடர்ந்து சீனா, வியட்நாம், வடகொரியா கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோசலிசம் நிறுவப்பட்டது. ஆனால் பிரம்மாண்டமான, பெருமைமிக்க சோசலிசத்தின் பீடுநடைக்குப்பின்னர் நவீனத் திருத்தல்வாதம் தனது அவலட்சணமான தலையை நீட்டியது. இறுதியாக பூர்ஷ்வாக்கள் எதிர்ப்புரட்சி மூலம் சோசலிசத்தை சிதைத்தனர்.

தற்போதைய சூழலில் எழுப்பும் உடனடி தேவைக்குரல் என்பது பல்வேறு நாடுகளிலும் திரண்டெழுந்து நடைபெற்றுவரும் வர்க்க, வெகுஜனப் போராட்டங்களை வழிநடத்திச் செல்லும் தகுதியாற்றலுடைய உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிகளைத் தோற்றுவிப்பதும் வளர்த்தெடுப்பதும் வலுப்படுத்துவதுமாகும். இந்த நெருக்கடியான தருணத்தில், மார்க்சிய–லெனினிய, சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் சரியான புரிதலின் அடிப்படையிலும் பிரயோகத்தின்மூலமுமே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட முடியும் என்று கருதுகிறோம். இதைப் பொருத்தமட்டில் பிற நாடுகளின் பாட்டாளி வர்க்கத்துக்கும் மார்க்சியம் பற்றிய உயர்ந்த அளவிலான புரிதலைக் கொடுப்பதும் பரப்புவதும் நமது சர்வதேசக் கடப்பாடாகும். இந்த வரலாற்றுக் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமானால், நமது கட்சியை சித்தாந்த, அரசியல், அமைப்புரீதியில் ஒழுக்கநெறி அடிப்படையில் மேலும் வளர்ப்பதும் உறுதிப்படுத்துவதும் கூடுதல் தேவையாயிருக்கிறது. அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கான ஒரு முன்னோட்டமே இந்த கட்சிக் காங்கிரஸாகும்.

*4)* முன்னர், குறிப்பாக நமது கட்சி தோற்றுவிக்கப்பட்ட கட்டத்திலும் அதன்பின்னர் சில பத்தாண்டுகளுக்குப் பின்னரும் சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்த ஒன்றுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியும் போர்குணமிக்க உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிகள் என்று மக்களின் மதிப்பைப் பெரும் தடையை நமது கட்சி எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்த நெருக்கடியான காலத்தின் ஓட்டத்தைக் கடக்க தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் முன்னெடுத்துக்காட்டான ஒரு போராட்டத்தை நடத்த வேண்டியதாயிருந்தது. இப்போதைய நிலை அதற்கு முற்றிலும் மாறானது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கிட்டத்தட்ட அம்பலப்பட்டு நிற்கிறது. அதன் முந்தைய போர்குணத்தையும் போராட்ட மனப்பாங்கையும் இழந்து இப்போது ஆளும் வர்க்கத்தின் ஆசிபெற்ற ஏதாவது ஒரு முதலாளித்துவத் தேர்தல் கூட்டணியோடு கூடிக்குலாவி வருகின்றது. மேலும், அக்கட்சி சித்தாந்தரீதியில் திவாலாகிவிட்டது. அக்கட்சி மக்கள் மத்தியில் போதுமானஅளவு அதன்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# ஆதரவற்றோர் இல்லங்களில் சிறுமிகள் மீது நடைபெற்ற பாலியல் கொடுமையைத் தொடர்ந்து பிரதம மந்திரிக்கு தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் எழுதிய கடிதம்

*(வன்புணர்வு, கூட்டு வன்புணர்வு, ஆட்கடத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் எழுந்ததையொட்டி ஆதரவற்றோர் இல்லங்கள் செயல்படும் விதம் குறித்து விசாரணை மேற்கொள்ள ஒரு உயர்மட்டக் கமிட்டி அமைத்திட வேண்டும் என பிரதம மந்திரிக்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), பொதுச்செயலாளர், தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் எழுதிய கடிதம்)*

*14, ஆகஸ்டு, 2018*

**பெறுநர்:** மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள்

நாட்டில் பெண்கள் மீது வேகமாக அதிகரித்து வரும் குற்றங்கள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை அடைந்திருக்கின்றோம். வன்புணர்வு, கூட்டு வன்புணர்வு, வன்புணர்வுக்குப் பலியானவர்களைக் கொடூரமாகக் கொலை செய்தல், வரதட்சணைச் சாவுகள், கௌரவக் கொலைகள் மற்றும் இதுபோன்ற பெண்கள் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் அபாயகரமான அளவிற்குச் சென்றடைந்திருப்பது, உண்மையில் சுதந்திர இந்தியாவில் பெண்கள் எவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என்பதைக் காண்பிக்கின்றது.

ஊடகச் செய்திகளின்படி, இந்தியாவில் தினமும் 106 பெண்கள் கற்பழிக்கப்படுகின்றனர். நாட்டில் 42 சதவீதப் பெண்கள் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுகின்றனர் மற்றும் சிறுமிகள் கற்பழிக்கப்படுவது 82 சதவீதம் அதிகரித்திருக்கிறது என இந்திய அரசாங்கத்தின் ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. சில நாட்களுக்கு முன்னர் சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவிய ஒரு அதிர்ச்சிதரும் வீடியோவில் உத்திரப்பிரதேசத்தில் ஒரு இளம் பெண், இளைஞர்களால் தரதரவென இழுத்துவரப்பட்டு மானபங்கம் செய்யப்படுவது காட்டப்பட்டது. இதற்கு முன்பாக, பீஹாரில் நடந்த இதுபோன்ற சம்பவத்தில், 8 பேர்கள் கொண்ட இளைஞர் கூட்டம் ஒரு சிறுமியை மானபங்கப் படுத்தி, இழுத்துச்சென்று நிர்வாணமாக்க முயல்கின்றது. இதில் இன்னும் மனிதாபிமானமற்ற செயல் யாதெனில், கற்பழிப்பவர்கள் அவர்களின் காமப்பசியைத் தீர்த்துக்கொள்ள குறிவைத்திருப்பது பெரும்பாலும் உடல் ரீதியாக மற்றும் மனரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் என்பதுதான்.

கடந்த வருடம் இந்நாடு மீண்டும் சந்தித்த, அனைத்துக்குற்றங்களிலும் மிகவும் அருவருப்பானது, நவீன உலகைத் தொற்றிக்கொண்டிருக்கும் மற்றும் மிகவும் வெறுப்படையவைத்திருக்கும் கொடூரக் குற்றமாக இருக்கும் காட்டிமிராண்டித்தனமான கற்பழிப்பு சம்பவமாகும். மேலும் அக்குற்றத்தை விட மிகவும் வெறுக்கத்தக்க செயல் யாதெனில், அரசு–நிர்வாகம் இத்தகைய மிருகத்தனமான செயலைப் புரிந்தவர்களைப் பாதுகாக்க எடுத்த இழிவான முயற்சிதானாகும். உன்னாவோ நகரத்தின் மக்கி என்ற கிராமத்திலிருக்கும் 17 வயதான ஒரு பெண் வேலை தேடிச் சென்றபோது தான் கடத்தப்பட்டு, ஒரு ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அவரது சகோதரர் உட்பட அவரது கூட்டாளிகளால் ஒரு வாரத்திற்கும் மேலாகக் கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டேன் என்று அவர் குற்றம்சாட்டியிருக்கின்றார். பாதிக்கப்பட்டவர் சட்டமன்ற உறுப்பினரின் பெயரைக் குறிப்பிட்டிருந்தும் அவர் கைது செய்யப்படவில்லை. மாறாக, தண்டனையிலிருந்து நன்றாகத் தப்பித்துக்கொண்டு, பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினரை அவர் தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருகின்றார்.

சட்டவிரோதமாக துப்பாக்கிகள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் நீதிக்குப் புறம்பாக, விநோதமான முறையில் பாதிக்கப்பட்டவரின் தந்தையையே போலீஸ் கைது செய்திருக்கிறது. சில நாட்களுக்குப் பின்னர், அவளது தந்தை பெருங்குடலில் ஓட்டை ஏற்பட்டதால் ரத்தத்தில் விஷமேறியதாலும், பல்வேறு காயங்களைத் தாங்கமுடியாமலும், கைகளைச் சுற்றியும், தொடையிலும், பிட்டத்திலும், முழங்காலிலும் மற்றும் வயிற்றில் சிராய்ப்புகள் ஏற்பட்டதாலும் அவர் போலீஸ் காவலில் இறந்துள்ளார் என அதிகார பூர்வ அறிக்கை கூறுகிறது. ஆளும் கட்சி சட்ட மன்ற உறுப்பினரான முக்கியக் குற்றவாளி இன்னும் சுதந்திரமாக உலவிக்கொண்டிருக்கின்றார். அத்துடன் பெண்களுக்கெதிரான இனப்படுகொலை நடவடிக்கைகள் ஓயவில்லை.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் ஜம்மு–காஷ்மீர் பிராந்தியத்திலிருக்கும் கத்துவாவில் ஓர் எட்டு வயதுச் சிறுமி கற்பழித்து, சிதைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டது ஓர் மனிதக் கொடூரச் செயல் என்பதை நினைவுபடுத்திப் பார்க்கின்ற போது அது நம் அனைவரையும் அவமானத்தில் தலைகுனிய வைத்திருக்கிறது. அந்தக் கற்பழிப்பு சம்பவத்துக்கு மதச்சாயம் பூச முயன்றது இன்னும் அவமானகரமான ஒன்றாகும். ஒரு காட்டுமிராண்டித்தனமான வன்புணர்வுக்கு எப்படி ஒரு அப்பட்டமான முறையில் மதச்சாயம் பூசமுடிகிறது என்பதைக்காண வியப்பாக உள்ளது. இந்த ஆட்கடத்தல், மிருகத்தனம், கூட்டு வன்புணர்வு மற்றும் இறுதியாக கொலை செய்ததைக்கண்ட சாட்சிகள் யாவரும் குற்றவாளியின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களால் அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஜம்மு–காஷ்மீரின் கத்துவாவிலும் உத்திரப்பிரதேசத்தின் உன்னாவிலும் சிறுமிகள் மீதான கொடூர வன்புணர்வுக்கு எதிராக சமூகத்தின் பல்வேறு பிரிவினர் அவர்களின் சீற்றத்தை பரந்த அளவில் வெளிப்படுத்தியிருந்தபோதும், வன்புணர்வு செய்தவர்களை அல்லது வன்புணர்வு குற்றம் சாட்டப்பட்டவர்களை அதிகாரத்தில் உள்ளவர்கள் பாதுகாத்திட, அல்லது ஆதரவாக நின்றது நாம் மத்தியகால சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோமா என எண்ணத்தோன்றுகிறது. தங்களை மதகுருமார்கள் என்றழைத்துக் கொள்பவர்கள் அவர்களின் ஆசிரமத்திற்குள்ளேயே ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி வேண்டுமென்றே சிறுமிகள் மீதான கண்ணியத்தில் எவ்வாறு மூர்க்கத்தனமாக நடந்துகொண்டு அவர்களை வன்புணர்வு செய்தனர் என்பதையும்கூட இந்நாடு தெரிந்துகொண்டது.

பலியான இருவரும் அரிதாக துணிச்சலுடன் இத்தகைய குற்றங்களை வெளியே காட்டியிருக்காவிட்டால், இது தொடர்ச்சியாக நடந்துகொண்டும் எப்போதும்போல் மூடி மறைக்கப்பட்டுக்கொண்டும் இருந்திருக்கும். இந்தச் சிறுமிகள் அளித்த அறிக்கையில் வெளிப்பட்ட அதிர்ச்சிதரும் விபரங்களின்படி, கடவுளின் அவதாரங்கள் எனக் கூறிக்கொள்ளும் இத்தகையவர்கள் நாட்கணக்கில் அச்சிறுமிகளை மானபங்கப்படுத்தியது மட்டுமின்றி, எதிர்க்கத்துணிந்தால் அல்லது இதைப் பற்றிப் பேசத்துணிந்தால் அவர்களை மட்டுமின்றி அவர்களது பெற்றோரையும்கூட கொலை செய்துவிடுவோம் என அச்சுறுத்தியுள்ளனர். நாடு முழுவதையும் கலக்கிய, இது மீண்டும் நடைபெறாத வகையில் அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என அரசாங்கம்– நிர்வாகத்தால் உறுதியளிக்கப்பட்ட 2012இல் நடந்த நிர்பயா சம்பவத்திற்குப் பின்னரும்கூட உருப்படியாக எதுவும் நடக்கவில்லை என்பதையும், நிலைமை மேலும் மோசமடைய அனுமதிப்பட்டிருக்கிறது என்பதையும் மட்டுமே இது காட்டுகிறது.

நாட்டின் தலைநகரத்தில் நடந்த இத்துயர சம்பவம் நாடுதழுவிய அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கையில், பீஹார் மாநிலத்தின் ஒரு தனிமையான பகுதியில் நடந்த, சமீபத்தில் வெளியான குற்றச்சம்பவம் இன்னும் படுபயங்கரமானதாகும். பீஹாரின் முசாபர்பூர் மாவட்டத்தில் மாநில அரசின் சமூகநலத்துறையின் மேற்பார்வையில் ஓர் அரசுசாரா அமைப்பால் நடத்தப்பட்டுவரும் ஓர் அனாதை இல்லத்தில் 34 சிறுமிகள் வன்புணர்வு செய்யப்பட்டிருக்கின்றனர். பயங்கரத்திலும் பயங்கரம் என்னவெனில், பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுவதை துணிச்சலுடன் எதிர்த்த அச்சிறுமிகளில் ஒருவர் கொலை செய்யப்பட்டு அவ்வளாகத்தினுள்ளேயே புதைக்கப்பட்டுள்ளார். நடந்துள்ள இந்த படுபயங்கர சம்பவம் மாவட்ட மூத்த காவல்துறைக் கண்காணிப்பாளரால்கூட உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

வலிப்பு நோய்க்கான மருந்துகள் உள்ளிட்ட 67 மருந்துகள் வன்புணர்வு செய்யப்படுவதற்கு முன்னர் அச்சிறுமிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என காவல்துறை கூறுகிறது. ஏன் இந்தக் குற்றம் மூடி மறைக்கப்பட்டது என்ற கேள்வி எழுகின்றது. என்ன நடந்துள்ளது என்பது அத்துறைக்கு தெரிந்திருக்கிறதா? சில வட்டார செய்தித்தாள்களையும் நடத்துகின்ற, மேலும் அவரது அரசு சாரா அமைப்புக்கு நிதியுதவியைப் பெற்றிட அவரது தொடர்புகளைப் பயன்படுத்தும் அந்த வட்டார அரசியல்வாதிக்கு மேற்கண்ட பாதுகாப்பு இல்லம் சொந்தமாக இருப்பதால் சந்தேகம் மிகவும் வலுக்க வேண்டும். ஐந்து வருடங்களுக்கு முன்பாக முசாபர்பூர் சமூக நலத்துறையால் பாதகமான அறிக்கை அளிக்கப்பட்டிருந்தபோதிலும், வியப்பளிக்கும் வகையில், அவருக்கு மீண்டும் மீண்டும் கருணை காட்டப்பட்டு அவரது திட்டங்களுக்கு ஒப்புதலும் அனுமதியும் வழங்கிய வகையில் அவரது ஐந்து பாதுகாப்பு இல்லங்களை நடத்திட மத்திய–மாநில அரசாங்கங்கள் இரண்டுமே ஆண்டுதோறும் ரூபாய் 1 கோடி நிதியுதவி வழங்கியிருக்கிறது.

ஒரு தனியார் கல்வி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட சமூக தணிக்கை அறிக்கை இல்லாமலிருந்திருந்தால் இந்தச் சம்பவங்கள் இன்னும் வெளிவராமல் மூடி மறைக்கப்பட்டுத்தான் இருக்கும். அந்த அனாதை இல்லத்தின் உடைமையாளரும் இக்குற்றத்திற்கான முக்கியக் குற்றவாளியுமான அவர், இன்னும் அதிகமாக இதுபோன்ற இழிச் செயலிலும் கற்பனை செய்யமுடியாத கொடூரச் செயலிலும் ஈடுபட்டுக்கொண்டேதான் இருந்திருப்பார். முசாபர்பூர் சிவப்பு விளக்குப் பகுதியில் உள்ள இதே நபரால் நடத்தப்பட்டுவரும் மற்றுமொரு ஆதரவற்றோர் இல்லத்திலிருந்து 11 பெண்களும் 4 குழந்தைகளும் காணாமல் போயுள்ளதாக இப்போது காவல்துறை கண்டறிந்திருக்கிறது.

பீஹார் ஆதரவற்றோர் இல்லச் சம்பவம் வெளியானதையடுத்து உத்திரப்பிரதேச மாநிலத்தின் டியோரியா நகரத்திலுள்ள மற்றொரு ஆதரவற்றோர் இல்லத்தில் வசிக்கும் பெண்கள் மீது இதுபோன்ற அட்டூழியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்பது தெரிய வந்துள்ளது. ஆதரவற்றோர் இல்லங்களில் வசிக்கும் பெண்களை பாலியல்–அடிமைகளாகப் பயன்படுத்திவரும் சம்பவம் அந்தப் பெண்கள் விபச்சாரத்திற்காக இரவு நேரங்களில் வெளியில் கொண்டுவரப்பட்டு காலை நேரங்களில் திரும்பி அனுப்பப்பட்டு வந்ததை ஒரு சிறுமி பாதுகாப்பு இல்லத்திலிருந்து தப்பித்து காவல்துறையில் தெரிவித்தபின்னர் தான் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இந்த ஆதரவற்றோர் இல்லத்தில் 42 பெண்கள் இருந்துள்ளனர், ஆனால் அவர்களில் 24 பேர்களை மட்டுமே காப்பாற்றிட முடிந்திருக்கிறது.

தொடர்ச்சி 4ம் பக்கம்

## தோழர் பிரவாஸ் கோஷ் அவர்களின் அறைகூவல்

# கட்சியின் 3வது காங்கிரஸை வெற்றிபெறச் செய்வோம்...

2ம் பக்கத் தொடர்ச்சி

பெயரைக் கெடுத்துக் கொண்டுவிட்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை அடியொற்றி நடைபோடும் இந்திய கம்யூனிஸ்ட் (சிபிஐ)யும் தற்போது வயோதிகர்கள் நிறைந்த கட்சியாக மாறிவிட்டது. இவ்விரண்டு கட்சிகளும் சீரழிவு செயல்முறைப் போக்குக்கு உள்ளாகிவிட்டன. இது நமது கட்சியை விரைவாக வளர்த்தெடுத்து விரிவுபடுத்தப் பொருத்தமான தருணமாகும். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் பெயரோ கட்சியின் பெயரோ அறியப்படாத மாநிலங்களிலும் இடங்களிலும் அவரது சிந்தனையை வளர்ச்சியுறாத தோழர்கள் எடுத்துச் செல்லும்போதுகூட நேர்மையான இடதுசாரி எண்ணம்கொண்ட அறிவுஜீவிகள், மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள், உழவர்பெருமக்கள் பேராதரவு காட்டிவருகின்றனர் என்பது மிகவும் நெஞ்சிக்கிதமாக உள்ளது. இந்த சாதகமான சூழலில் புதிய இடங்களை கண்டறிந்து கட்சிப் பணியாற்ற கணிசமான புதிய இளைஞர்கள், மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு மாநிலங்களிலும் பயிற்சியளிக்கப்பட்டு வார்த்தெடுக்கப்படவேண்டிய தேவை உள்ளது. இந்த முக்கியமான உடனடிப்பணி 3வது கட்சிக் காங்கிரஸின் தயாரிப்புப் பணிகளோடு பின்னிப் பிணைந்துள்ளது.

5) நமது கட்சியைப் போன்றதொரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிக்கு நிகழ்கால சர்வதேச–தேசிய சூழ்நிலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. முன்னொரு காலத்தில் ஆற்றல் நிறைந்ததாக இருந்த சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கமும் பெரும் பின்னடைவைச் சந்தித்ததும், சோசலிச அமைப்பும் தற்போது சிதைக்கப்பட்டுவிட்டதும் தீவிர விரக்தியை உலகம் முழுவதும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. மார்க்சிசம்–லெனினிசம், கம்யூனிச இலட்சியம் தொடர் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு திரிக்கப்பட்டுவருகிறது. மக்களால் போற்றி மதிக்கப்பட்ட மகத்தான மார்க்சிய சிந்தனையாளர்களை இழிவுபடுத்த தொடர்ச்சியான தீய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. சமுதாயத்தில் உய்த்தறியும் அறிவுத்திறமை, ஒழுக்கநெறி, மனித விழுமியங்களனைத்தும் திட்டமிட்டு சிதைக்கப்பட்டு வருகின்றன. இச்சூழலில் மார்க்சிச–லெனினிச–கம்யூனிசத்தைப் பேணிப் பாதுகாப்பதும் அதன் உன்னதத்தை உயர்த்திப் பிடிப்பதும் மிகவும் தேவைப்படுகிற, ஆனால் கடுமையான சிரமமான பணியாகும். வரலாறு இந்தப் பொறுப்பை நம்மிடம் சரியாகவே ஒப்படைத்திருக்கிறது. இது கட்சிக்குள் சித்தாந்த, அரசியல், அறநெறி ஒழுக்கத்தரத்தில் தரத்தை உயர்த்திட தீவிரமான வலிமிகுந்த, தீர்மானகரமானப் போராட்டத்தை கட்சிக்குள் தோழர்களிடம் கோரி நிற்கிறது. அது கட்சியை கட்டியமைத்து, பலப்படுத்தி, ஸ்திரப்படுத்தும் திறமையை மேலும் மேலும் அவர்களுக்கு வழங்கும்.

எல்லா தோழர்களும் சீரழிந்த முதலாளித்துவ சமூக அமைப்பின் பிறப்பு அடையாளங்களோடு தான் கட்சியில் சேருகின்றனர். மேலதிகமாக, நாம் மிகவும் மாசுபடுத்தப்பட்ட முதலாளித்துவச் சூழலால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளோம். அச்சூழல் ஒவ்வொரு நாளும் நொடிப்பொழுதும் நம்மீது நாசகர செல்வாக்கைச் செலுத்தி, நம்மை களங்கப்படவைத்திட முயற்சிக்கிறது. அதன் விளைவாக நாம் தனிமனிதவாதம், தன்னகந்தை, சுயதம்பட்டம், விமர்சிப்போர் மீதான வெறுப்புணர்வு, பதவியை தேடியலைதல், அதிகாரவர்க்க உளப்பாங்கு, கட்டுப்பாடு–கடமையாற்றுவதில் அலட்சியப் போக்கு, மத்தியத்துவத்துக்கும் அத்தாரிட்டிக்கும் பணிய மறுத்தல் சொகுசுமயமான வாழ்க்கையை நோக்கிய ஈர்ப்பு, நுகர்வுக் கலாச்சார ஈர்ப்பு, காதல்–பாலுறவு ஒழுக்க அத்துமீறல்கள், குடும்ப வாழ்க்கையின் பலவீனம் ஆகியவற்றுக்கு நாம் பலியாகும் வாய்ப்பிருக்கிறது. இவை குறித்த தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் வழிகாட்டுதலினடிப்படையில் எச்சரிக்கையுடன் செயல்படவில்லையெனில் இத்தகைய முதலாளித்துவ தீமைகளுக்கு நாம் பலியாகிவிடுவோம். மரணத்தைத் தழுவிக்கொண்டிருக்கும் முற்றிலும் சீரழிந்து போன முதலாளித்துவத்தின் நேரடியான, மறைமுகமான தாக்குதல்களைத் தோல்வியுறச்செய்து பாதுகாத்து கம்யூனிசப் பண்புகளை அடைந்து அவற்றைப் பேணிப்பாதுகாக்கும் போராட்டம் மிகவும் கடினமானது. நொடிப்பொழுது எச்சரிக்கையின்மையும் மெத்தனமும் அல்லது சமரசமும்கூட முயன்று அடையப்பெற்ற உயர்ந்த தரத்தை வீழ்ச்சியுறச்செய்யும்.

ஆகவே பாலுணர்வு உள்ளிட்ட வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய இடைவிடாத போராட்டம் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் வழிகாட்டுதலினடிப்படையில் நடத்தப்படவேண்டியுள்ளது, தவிர்க்கஇயலாததாயிருக்கிறது. இப்போராட்டத்தை நடத்திட கட்சி அமைப்பை மேலிருந்து கீழ்வரை முழுமையாகச் சரிசெய்து புத்துயிரூட்டுவது ஒரு உடனடிக் கடமையாகும். நமது கட்சியானது பல்வேறு மட்டங்களில் கணிசமான எண்ணிக்கையில் மதிப்புவாய்ந்த வயதான மற்றும் இளம் தலைவர்களையும் அமைப்பாளர்களையும் உயிர்த்தியாகம், வயது முதிர்வு மற்றும் நோயின் காரணமாக இழந்துள்ளது.

பல்வேறு மட்டங்களிலுமுள்ள தலைவர்களில் சிலர் முதுமையடைந்துவிட்டனர். சிலர் உடல்ரீதியில் இயலாதவர்களாக உள்ளனர். சிலர் சமரச நடவடிக்கைகள் கொண்டவராகிவிட்டனர். சிலர் முன்முனைப்பு முயற்சிகளில் மெத்தனப் போக்கை கடைபிடிக்கின்றனர். இத்தகைய சூழல் கட்சியின் பல்வேறு மட்டங்களிலும் புதிய, ஆற்றல்வாய்ந்த, திறன்மிக்க தோழர்களைக்கொண்டு கட்சி அமைப்புகளை உருவாக்குவதையும் மறுவார்ப்பு செய்வதையும் இன்றியமையாததாக்கியுள்ளது. வரவிருக்கும் கட்சிக் காங்கிரஸ் இந்தப் பணியையும் இலக்காகக் கொண்டுள்ளது.

எனவே இப்பின்னணியையும் நம்முன்னுள்ள கடமைகளையும் சரியாகப் புரிந்துகொண்டு அனைத்து மட்டத்திலுமான தோழர்கள் 3வது கட்சி காங்கிரஸை வெற்றியடையச் செய்திட முன்னோக்கிச் செல்வார்கள் என நான் நம்புகிறேன் ■

புரட்சிகர வாழ்த்துக்களுடன்

**பிரவாஸ் கோஷ்**

பொதுச் செயலாளர்

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

ஜூலை 17, 2018

கொல்கத்தா

# ஆதரவற்றோர் இல்லங்களில் சிறுமிகள் மீது...

3ம் பக்கத் தொடர்ச்சி

மீதுமுள்ள 18 பெண்கள் என்ன ஆனார்கள் என்பது இன்னும் தெரியவில்லை.

மத்தியப் புலனாய்வுத்துறை விசாரணையில் அதன் செயல்பாட்டில் முறைகேடுகள் இருப்பது கண்டறியப்பட்ட பின்னர், அந்த ஆதரவற்றோர் இல்லத்திற்கான உரிமம் 2007இல் ரத்துசெய்யப்பட்டது. ஆனால், அதன்பின்பு அதிகாரிகளின் வாதப்படி நீதிமன்றத்திடமிருந்து தடையாணை பெற்றதால் அந்த இல்லம் தொடந்து இயங்கி வந்தது. ஆனால் உத்திரப்பிரதேச மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் நலப்பாதுகாப்பு அமைச்சரே உறுதிசெய்தபடி, அந்த டியோரியா பாதுகாப்பு இல்லமானது சட்டவிரோதமாகவே இயங்கிக்கொண்டிருந்தது. அந்தப் பாதுகாப்பு இல்லத்தில் இருப்பவர்களை மாற்றிடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அந்த உத்தரவு நிறைவேற்றப்படவில்லை. அந்த பாதுகாப்பு இல்லத்தின் உரிமம் ரத்துசெய்யப்படிருந்தபோதிலும் வட்டார காவல்துறையினர் அந்த இல்லத்திற்கு பெண்களை தொடர்ந்து அனுப்பிக்கொண்டுதானிருந்தனர்.

ஆனால், இவையாவும் உறைந்து கிடக்கும் பனிமலையின் நுனி மட்டுமே. நாட்டிலுள்ள 9,000க்கும் மேற்பட்ட குழந்தைப் பாதுகாப்பகங்கள் மற்றும் அரசு நிதியுதவியில் இயங்கும் எண்ணற்ற மனநிலை நோயாளிகள் இல்லங்களில் என்ன நடந்துகொண்டிருகின்றது என்பது யாருக்குத் தெரியும்.

நிர்வாகக் குறியீட்டின்படி, கொடூர இல்லங்கள் செயல்பட்டுக்கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் பீஹார் மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய இரண்டு மாநிலங்களுமே மோசமாகவே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இத்தகைய படுபயங்கர குற்றங்களில் பெரும்பாலும் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள், தண்டனையிலிருந்து தப்பித்திடுமளவிற்கு ஒன்று ஆட்சியாளர்களுடன் போதிய செல்வாக்கினைக் கொண்டுள்ளவர்களாக இருக்கின்றனர் அல்லது அத்தகையோர் செயல் ஆர்வலர்களாக, ஏன் அதிகாரத்திலிருக்கும் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களாகவும்கூட இருக்கின்றனர். அதனால் அவர்கள் எந்த தண்டனையும் வழங்கப்படாமல் விட்டுவைக்கப்படுகின்றனர்.

இத்தகைய குற்றவாளிகள் விரைவு நீதிமன்றத்தில் முறையாக விசாரணை செய்யப்படவேண்டிய தேவையும், அவர்கள் கடுமையான மற்றும் எடுத்துக்காட்டான தண்டனையை எதிர்கொள்ள வேண்டிய தேவையுமிருக்கையில், இதற்கெதிராக எவ்வித முயற்சியும் எடுக்காமலிருப்பது என்பது பெண்களுக்கெதிரான குற்றங்கள் காவல்துறை–நிர்வாகத்தின் உடைந்தையுடன் அல்லது அனுமதியுடன் நடந்துகொண்டிருக்கின்றன என்பதையே சுட்டிக்காண்பிக்கின்றது.

ஆகவே ஓய்வுபெற்ற நீதிபதிகள், நீதித்துறை வல்லுனர்கள், சமூக அறிவியலாளர்கள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள், பெண்ணுரிமைச் செயல்பாட்டாளர்கள் மற்றும் புகழ்பெற்ற அறிவுஜீவிகள் அடங்கிய உயர்மட்டக் கமிட்டி நேர்மையாக அமைக்கப்படவேண்டும் என்றும் இத்தகைய காப்பிடங்கள், இல்லங்கள் மற்றும் புகலிடங்கள் எவ்வித அரசாங்க அல்லது நிர்வாகத் தலையீடு ஏதுமின்றி செயல்படுவதைக் கண்காணிக்கும் பொறுப்பை அதனிடம் தரவேண்டும் என்றும், கவலையுற்றிருக்கும் நாட்டு மக்கள் உண்மை நிலவரத்தை அறிந்துகொள்ளும் வகையில் அவர்கள் யதார்த்த நிலவரம் பற்றிய உண்மை அறிக்கையைச் சமர்ப்பித்திட வேண்டும் எனவும் நாங்கள் கருதுகிறோம்.

மேலும் அக்கமிட்டியானது, இத்தகைய இல்லங்களில் வாழும் நிராதரவற்றவர்களுக்கு மேற்கொண்டு எவ்வித அத்துமீறல், கொடுமை, அல்லது பாலியல் துன்புறுத்தல்கள் நடைபெறாமலிருப்பதை உத்திரவாதப்படுத்திட, குறிப்பிட்ட கால வரையறைக்குள் உறுதியான நிவாரண நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுவதற்கான ஆலோசனைகளை வழங்க அறிவுறுத்தப்படல்வேண்டும். நாட்டின் பிரதமர் என்ற முறையில், எங்களின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளும் அவசியத்திற்கு நீங்கள் உடன்படுவீர்கள் என்றும் ஆதற்கேற்ப மேல் நடவடிக்கை எடுப்பீர்கள் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம் ■

தங்கள் உண்மையுள்ள

**பிரவாஸ் கோஷ்**

பொதுச்செயலாளர்

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

# மிருகத்தனமான கும்பல் படுகொலைக்கு எவ்வாறு முற்றுப்புள்ளி வைப்பது

விண்ணைமுட்டும் விலைஉயர்வு, அதிகரிக்கும் வேலையின்மை, பெண்கள்–குழந்தைகள்மீது கொடூரத் தாக்குதல்கள், ஏழை பணக்காரர்களுக் கிடையில் எப்போதும் அதிகரித்துக்கொண்டிருக்கும் இடைவெளி, தேசிய மட்டத்திலிருந்து வட்டார அளவில்வரை அரசு நிர்வாகத்தின் முழுமையான செயலிழப்பு மற்றும் பல்வேறு நோய்கள் பீடித்துள்ள ஒரு நாடானது கும்பல் படுகொலை போன்ற சமீபத்திய காட்டுமிராண்டித்தன சம்பவத்தினால் அதிரவைக்கப்பட்டுள்ளது.

லின்ச்சிங் (**Lynching**) என்று அழைக்கப்படுகிற இச்செயல், அது எந்தக் காரணத்திற்காக நடத்தப் பட்டாலும், அது வெறிகொண்ட கும்பலால் நடத்தப்படுகிற கொடூரக் கொலையேயன்றி வேறல்ல. இதனை ஊடகங்களும் நீதிமன்றங்களும் கும்பலாட்சி (Mobocracy) என அழைக்கின்றன.

குறிப்பாக, சில சமூகங்களிடையே தூனிய வேட்டை என்ற சம்பிரதாயம் கடைபிடிக்கப்பட்டு வரும் இந்நாட்டில் கும்பல் படுகொலையென்பது அரிதானது இல்லைதான். ஆனாலும், டிஜிட்டல் இந்தியா என பிரதமர் மோடி பெருமுழக்கமெழுப்பி வரும் நிலையில், தலைநகர் டெல்லியிலிருந்து 60 கிலோமீட்டர் தூரமே உள்ள உத்திரப்பிரதேசத்தின் ஒரு கிராமத்தில், தனது வீட்டில் மாட்டிறைச்சி வைத்திருந்தார் எனவும் உண்டார் எனவும் கூறி, முகமது அக்லாக் என்ற முதியவர் வீட்டிலிருந்து வெளியே இழுத்துவரப்பட்டு அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இத்தகைய சம்பவமானது, மக்களை அடக்கி, கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க அதிகாரத்திலி ருக்கும் சக்திகள் கையிலெடுத்திருக்கும் திட்டத் திற்கு ஒரு நிச்சயமான நோக்கத்துடன், நாடு முழுவதும் நடத்தவிருக்கும் பயங்கரத் திட்டத்திற்கு வழிவகுத்திருக்கிறது.

## கும்பல் படுகொலையின் பின்னால் இருக்கும் பொதுவான அம்சங்கள்

2014 மே மாதத்தில் நரேந்திர மோடி தலைமை யிலான பாஜக–ஆர்எஸ்எஸ் கூட்டணி மத்தியில் பதவிக்கு வந்தபின் 97% கும்பல் வன்முறைகுறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளதாக 2017 ஜூன்வரை பதிவுசெய்யப்பட்ட வன்முறைகுறித்த ஓர் ஆய்வு (ஃப்ஸ்ட் போஸ்ட் 03.06.17, இந்தியா டுடே 26.06.17, ஹிந்துஸ்தான் டைம்ஸ் 28.06.17) சுட்டிக்காண் பிக்கிறது. நல்ல நாட்கள் வரப்போவதாக அவர் வாக்குறுதியளித்தார், ஆனால் நடைபெற்ற தெல்லாம் அதுதானா? ஏப்ரல் 2017 முதல் இந்த நல்லநாட்களில் மட்டும் 46 கும்பல் படுகொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2018 மே இறுதியிலிருந்து ஒரு மாத காலத்தில் 19 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. மாகாராஷ்டிராவின் துலேவில் மொத்தமாக 5 நபர்களும், இரண்டு நாட்களுக்குள் திரிபுராவில் 3 நபர்களும் கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவங்கள் இதில் அடங்கும். எனவே இவையெல்லாம் வழக்கமானதோ, தனித்ததோ அல்ல.

இரண்டாவதாக, இப்படுகொலையின் வீச்சானது நாட்டின் தெற்கிலிருந்து வடக்காக, கிழக்கிலிருந்து மேற்காக அனைத்துத் திசைகளிலும் நடந்திருக்கிறது. ஹிமாச்சல் பிரதேசம், ஜம்மு–காஷ்மீர், உத்தரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், குஜராத், கர்நாடகா, தமிழ்நாடு, ஒரிசா, ஜார்க்கண்ட், அஸ்ஸாம், திரிபுரா, ஆந்திர பிரதேசம், தெலுங்கானா, மேற்குவங்கம் என இந்தக் காண்டுமிராண்டித்தனம் எங்கும் இடம்பெற்றது. இருந்தபோதிலும், இந்த கும்பல் படுகொலைகளில் சரிபாதி உபி, குஜராத், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம், அஸ்ஸாம், திரிபுரா ஆகிய பாஜக ஆளும் மாநிலங் களில்தான் நடைபெற்றுள்ளது. இவையெல்லாம் தற்செயலாக நடைபெற்றதென்றா?

மூன்றாவதாக, தனித்த ஒருசிலவற்றைத் தவிர இவ்வனைத்து தாக்குதல்களிலும் ஈடுபட்டவர்கள் இந்துத்துவவாதிகளான பாஜக–ஆர்எஸ்எஸ் கூட்டணி அல்லது வி எச் பி, ஹிந்து சேனா, பஜ்ரங்தள் போன்ற அவற்றின் வேறுபல அமைப்புகளைச் சார்ந்தவர்களே. இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டார்கள் அல்லது வன்முறை கும்பலுக்கு அவர்கள் எத்தனைபேரானுலும் சரி அவற்றிற்கு தலைமை தாங்கினார்கள். இத்தாக்கு தல்கள் எண்ணிலடங்காதவை. இவற்றுக்கு பலியானவர்கள் வயது, பாலினம், சமூக அந்தஸ்து என எவ்வித பாகுபாடுமற்று, குறிப்பாக முஸ்லீம்கள் அல்லது கிறிஸ்துவர்கள், தலித்துக்களேயாவர். பெரும்பாலான சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர் கள் ஏழை மக்களே, அதுவும் தினக்கூலி பெறுபவர்களே. எனவே X = Y என்ற சமன்பாடு பின்பற்றப்பட்டது. அதாவது குறிப்பிட்ட வகைப்பட்ட தாக்குதல் தொடுப்பவர் (x) குறிப்பிட்ட வகைப்பட்டவரை (y) குறிவைப்பார். இவர்கள் பற்றவைப்பதற்கான திரி, மிகவும் சுலபமான தாகத்தான் இருந்தது. அது, சிறுபான்மையினருக் கெதிரான வகுப்புவாத வெறுப்பும் தலித்துக் களின்பால் உயர்ஜாதியினரின் அத்துமீறிய அடக்கு முறை மனோபாவாமும் ஆகும். கும்பல் தாக்கு தலுக்குப் பலியாவோர், மேற்சொன்ன வகுப்பினர் மட்டுமின்றி, விதி மீறுபவர் என சந்தேகத்திற்கு உள்ளாகும் எவர் வேண்டுமாகவும் இருக்கலாம் என்பதை இனி இக்கட்டுரையில் காண்பிப்போம். ஆக, கும்பல் படுகொலையைத் தூண்டக் காரணமாக இருந்த ‘விதி மீறல்‘ குற்றம்தான் என்ன?

நான்காவதாக, கையில் தயாராக உள்ள ஏதாவ தொரு சாக்கில் அல்லது பழைய ஆறிப்போன பிரச்சினைகள், ஏதேனும் புரளியைக்கொண்டு இந்த கும்பல் படுகொலைகள் நடந்தன. இந்த கும்பல் படுகொலைகளின் உப நிகழ்ச்சிகளாக பகுத்தறிவாளர்களை கொலைசெய்வது நடந்தது. மேலே கூறியுள்ளதுபோல், அக்லாக்கும் அவரது குடும்பத்தினரும் மாட்டிறைச்சி உண்டதாகக் கூறிய குற்றச்சாட்டு பொய் என பின்னர் நிரூபிக்கப்பட்டது. மேலும் உபியில் பசுவதை தடை செய்யப்பட்டிருந்தாலும் மாட்டிறைச்சி உண்பது தடைசெய்யப்படவில்லை. உண்மையில், மாட்டிறைச்சி உண்பது அல்லது ‘லவ் ஜிகாத்’ அல்லது ‘கட்டாய மதமாற்றம்’கூட பிரச்சினையை துவக்குவதற்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கும்பல் படுகொலையில் பலியானவர் களெல்லாம் லாரி டிரைவர்கள் அல்லது கால்நடை வியாபாரிகள், பெரும்பாலும் தொழில் சார்ந்த, வியாபார நிமித்தமாக அல்லது தம் வாழ்வாதார உரிமைசார்ந்து இறந்த மாட்டை அல்லது இறைச்சியை கொண்டுசெல்லக்கூடிய துப்புரவு தொழிலாளர்கள் போன்றவர்கள்தான். இது ஒருபுறமிருக்க, ஹரியாணாவின் பலாப்கார்கில் புறநகர் ரயிலில் இடம்பிடிப்பது சம்மந்தமாக எழுந்த வாய்தகராறில் ஒரு முஸ்லீம் பையன் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டு அவனது இரண்டு தம்பிமார்களும் படுகாயத்திற்குள்ளாக்கப் பட்டனர். எனவே இவர்களது ஒற்றைக் குறிக்கோள் தெளிவானது: சிறுபான்மையினரைத் தாக்குவது. “பசுவிற்கு நேரும் எந்த அவமரியாதையையும் இந்தியா சகித்துக்கொள்ளாது” என்ற கோஷத்தை எழுப்பிக்கொண்டு பசுக்குண்டர்கள் புரியும் இத்தகைய கொலைக் குற்றங்கள் இந்தியாவில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் கடும் கண்டனத்திற்குள்ளானது.

ஐந்தாவதாக, நிகழ்வுகளின் சமீபத்திய திருப்பமாக, பிரதமருக்கு மிகவும் பிடித்த சமூக ஊடகமானது பேரழிவுப் பங்காற்றியது. எஸ்எம்எஸ், வாட்ஸ்அப் மற்றும் சமூக ஊடகங்களான பேஸ்புக், டிவிட்டர், யூ டியூப் போன்றவற்றின் மூலம் குழந்தைகளைப் பிடிப்பவர்கள் அல்லது கால்நடைகளைத் திருடுபவர்கள் ஊருக்குள் புகுந்துவிட்டார்கள் என்று படங்களை அனுப்புவது வீடியோக்களை பரப்புவது ஆகிய பிரச்சாரங்கள் பெரும்பாலான கும்பல் படுகொலையை வழி நடத்தியது. இவ்வாறு பரப்பப்பட்ட படங்கள், வீடியோக்கள், செய்திகளெல்லாம் பொய்யானவை ,மார்ஃபிங் செய்யப்பட்டவை என்பது எண்ணற்ற சம்பவங்களின்மூலம் தெளிவானது. குழந்தை பிடிப்பவர் குறித்த புரளியை கிளப்பிவிட்டு துலேயில் 5 அப்பாவி நபர்கள் கொல்லப்பட்ட சம்பவம் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். குழந்தை களின் உடல்கள் வரிசையாக கிடத்தப்பட்டு, உடல் உறுப்புக்களை கடத்துவதற்காக கொல்லப்பட்ட குழந்தைகள் அவை என இந்தியில் விளக்கும் ஒரு வீடியோ காண்பிக்கப்பட்டது. ஆனால் அந்த வீடியோவானது மகாராஷ்டிராவிலிருந்தோ, ஏன் இந்தியாவைக்கூட சார்ந்ததல்ல. அதில் இருப்பது 5 வருடங்களுக்கு முன்பு வாயுத்தாக்குதலால் சிரியாவில் கொல்லப்பட்ட குழந்தைகளாகும்.

ஆறாவதாக, இந்தப் புரளி கிளப்பப்படுவது எவ்வளவு அபாயகரமானதென்பதும் எந்தளவு

தொடர்ச்சி 6ம் பக்கம்

# புதுச்சேரியில் மதுபானக் கடையை மூடக்கோரி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஆர்ப்பாட்டம்




புதுச்சேரி கருவடிக்குப்பம் சாலையில் அமைந்துள்ள மதுபானக் கடையை அகற்றக் கோரி ஆகஸ்ட் 28, 2018 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தயாரிப்புக் கமிட்டி செயலாளர், தோழர் லெனின் துரை உரையாற்றுகிறார்

## மிருகத்தனமான கும்பல் படுகொலை

# பொய்யான காரணங்களைக்கூறி கும்பல் படுகொலைகள் திட்டமிட்டே அரங்கேற்றப்படுகின்றன

5ம் பக்கத் தொடர்ச்சி

கொடூரத்தை இவை அடைகின்றன என்பதையும் பின்வரும் சில உதாரணங்களிலிருந்து நாம் காணலாம். ஒவ்வொரு கும்பல் படுகொலையும் குழந்தை பிடிப்பவர்கள் அல்லது கால்நடைகளைத் திருடுபவர்கள் ஊருக்குள் நடமாடுகிறார்கள் என்ற புரளியாலேயே வழிநடத்தப்பட்டது. திரிபுராவில் சமூக ஊடகங்களில் புரளி கிளப்பிவிடுவது குறித்து மக்களை எச்சரிக்கை செய்வதற்காக அரசாங்கத்தின் சார்பில் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரியே அதற்குப் பலியானார். சூழ்நிலைமை களால் நிர்ப்பந்திக்கப்பட்டு மாநில பாஜக அரசாங்கம் செல்போன், இண்டர்நெட் சேவைகளை இரண்டு நாட்களுக்கு தடைசெய்தது (ஆதாரம்: அவுட்லுக் இந்தியா–ஜுலை 2, 2018). குழந்தைத் திருடர்கள் அஸ்ஸாமிற்குள் புகுந்துவிட்டனர் என சுற்றுக்கு விடப்பட்ட ஒரு பேஸ்புக் பதிவின் காரணமாக இருவர் கொல்லப்பட்டனர். அவ்விருவரில் ஒருவர் ஒலிப் பொறியாளரும் மற்றொருவர் வியாபாரியுமாவர். அவர்கள் அஸ்ஸாமின் தொலைதூரப் பகுதியான கார்பி அங்கலாங் எனுமிடத்திற்குச் சென்று இயற்கையின் ஒலிகளைப் பதிவுசெய்வதற்காகவும் ஏராளமாகக் கிடைக்கக்கூடிய ஒருவகை ஆபரண மீன்களைப் பிடிப்பதற்காகவும் சுற்றுலா வந்தவர்கள் ஆவர். அது மின்சார வசதியும் செல்போன் தொடர்பும் இல்லாத பகுதியாகும். அவர்கள் திரும்பிக் கொண்டிருக்கும்போது கிராமத்தினர் சிலர் அவர்களைக் காரிலிருந்து இழுத்து வெளியே தள்ளி மற்றவர்களின் வேண்டுகோளையும் நிராகரித்துத் தாக்கியிருக்கின்றனர். தாக்குதல் தொடுத்தவர்களில் ஒருவர் இந்த முழு நிகழ்வையும் வீடியோ எடுத்து சுற்றுக்கு விட்டிருக்கிறார். அதில், தான் கௌஹாத்தியைச் சேர்ந்த ஒரு அஸ்ஸாமி யாகும் என்ற தன்னுடைய அடையாளத்தைக் காண்பித்து அந்த ஒலிப்பொறியாளர் தன் உயிரைக் காத்துக்கொள்ள கெஞ்சும் காட்சியும் இடம்பெறுகிறது. கிராமப் பாதுகாப்பு குழுவின் ஓர் உறுப்பினர் இந்த கும்பல் படுகொலை நடந்த இடத்திலிருந்து 30 நிமிட பயணம்செய்யும் தொலைவிலுள்ள டோகமோகா போலீஸ் நிலை யத்திற்கு முதலில் இவ்விஷயத்தை தெரிவித்திருக் கிறார். அவ்விடத்தை போலீஸ் அடைந்தபோது ஒருவர் இறந்துவிட்டார், மற்றொருவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். அவர்களுடைய வாகனமும் கடும் சேதமுற்றிருந்தது. அஸ்ஸாமில் நடந்த மற்ற இரண்டு சம்பவங்களில், "குழந்தைத் திருடர்கள்" குறித்து வாட்ஸ்அப்பில் வலம்வந்த புரளியைத் தொடர்ந்து தாக்கப்பட்டதில் ராணுவம் மற்றும் போலீஸால் ஆறுபேர் காப்பாற்றப்பட்டனர்.

கர்நாடகாவில் பிடாரில் கடந்த ஜுலை மாதம் தன் நண்பரின் கிராமத்தில் நண்பர்களோடு சேர்ந்து குழந்தைகளுக்கு அன்போடு இனிப்புக் களை வழங்கிக்கொண்டிருந்த ஒரு ஐ டி ஊழியர் அடித்துக் கொல்லப்பட்டார். ஹைதராபாத்தைச் சேர்ந்த பொறியாளர் முகமது ஆசாமும் அவரது நண்பர்களும் குழந்தைத் திருடர்கள் என பரப்பப் பட்ட ஒரு வாட்ஸ்–அப் வீடியோ செய்தியால் அவர் அடித்துக் கொல்லப்பட்டார். போலீஸ் தலையீட்டின் காரணமாக மற்றவர்கள் காப்பாற்றப் பட்டனர். ஒரு குழந்தையைக் கடத்தப்போவதாகப் பரப்பப்பட்ட புரளியைத் தொடர்ந்து இரண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் சென்னையில் கொல்லப்பட்டனர். தாக்குதல் தொடுக்கும் வீடியோ பதிவு சமூக ஊடகங்களில் உலாவந்த பின் இச்சம்பவத்தில் வழக்கு பதிவுசெய்யப்பட்டது. ஆந்திர மாநிலம் ஒபானபள்ளி என்ற கிராமத்தில் புரளியின் காரணமாக மனநிலை சரியில்லாத ஒருவர் இழுத்துவரப்பட்டுக் கொலைசெய்யப் பட்டார். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் ராஜஸ் தானின் ஆல்வார் பிரதேசத்தில் பெஹுகான் என்பவர் பசு குண்டர்களால் அடித்துக் கொல்லப் பட்டார். இவ்வருடம் ஜுலை 20ம் தேதி ஹரியாணாவில் ஒருவர் இரண்டு பசுக்களை ஓட்டிச்செல்லும்போது கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டார்.

ஏழாவதாக, இதுபோன்ற பயங்கர சம்பவங்கள் போலீஸ்–நிர்வாகத்தின், அரசாங்கங்களின் மனசாட்சியை உலுக்கவேயில்லை. அவர்கள் சில வழக்குகளில் செயல்படவும் சில குற்றவாளி களைக் கைதுசெய்துமிருப்பதும் உண்மையே. ஆனாலும் குற்றவாளிகள்மீது கடும் தண்டனை விதிக்கப்பட்ட வழக்கு ஒன்றுகூட இல்லை. மனதோடு பேசுவதாகக்கூறிக்கொள்ளும் பிரதமர் இவ்விஷயத்தில் திறந்த மனதோடு இல்லை, இந்த மிருகத்தனம் குறித்து எவ்வித கடுமையான வார்த்தைகளும் அவர் மனதில் தோன்றவில்லை, வெளிவரமுமில்லை. அவ்வாறு ஏதேனும் சிறிது பேசினாலும் இந்த வெறிக்கும்பல் அவற்றை சட்டை செய்வதில்லை, நாட்டின் சட்டத்தைக் கேலிக்கூத்தாக்குகின்றன இந்த கும்பல். மக்களின் சுதந்திரத்தை சர்வசாதாரணமாக கேள்விக் குள்ளாக்குகின்றன. மக்கள் எதை உண்ண வேண்டும், சட்டபூர்வமாக எந்தத் தொழிலை மேற்கொள்ளவேண்டும், எப்படி வாழவேண்டும், யாரை அவர்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதையும்கூட அவர்களே சொல்கின்றனர்.

இந்த படுகொலைக்கெதிராக எத்தகைய விமர்சனமும் பொதுவெளியில் அமைச்சர்களால் எழும் கண்டனங்களும்கூட வீணாகிப்போகின்றன. மாறாக, ஏகபோகங்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களின் சில சக்திவாய்ந்த பிரிவினரும் அரசாங்கத்தின் பிரச்சார கட்டமைப்பும் உள்நோக்கங்கொண்ட இந்துத்துவ பிரமுகர்களும் இந்துக்களால் பசு எவ்வாறு புனிதமாக போற்றப் படுகிறதென்ற பெரும் பிரச்சாரத்தை சமூக ஊடகங்களில் செய்துவருகின்றனர். இந்தப் பிரச்சாரம் தீவிரம் அடையஅடைய இந்த காட்டு மிராண்டித்தனமான தாக்குதல்களும் தீவிரமடை கின்றன. மேற்கூறியபடி, சமூக ஊடகங்கள் பொய்ச் செய்திகளையும் போலி வீடியோக் களையும் பரப்பி புரளியை கிளப்புகின்றன. இந்தப் பொய்ச் செய்திகள்குறித்து அரசாங்கங்களும் அவ்வப்போது குரலெழுப்புகின்றன, ஆனால் அதற்கெதிரான செயற்பாடென்பது மிகக்குறைவே. ஜார்க்கண்ட் மாநிலம் ராம்கார்கிலில் மாடுகளைக் கொண்டுசெல்கிறார் என்ற சந்தேகத்தின்பேரில் அலிமுதீன் அன்சாரி என்பவர் வெட்டிக் கொல்லப்பட்டார். அவரது வாகனம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

கீழ் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட அப்பட்டமான, பாஜக–ஆர்எஸ்எஸ் தொடர்புள்ள படுகொலைக் கும்பலைச் சார்ந்தவர்களில் கைதுசெய்யப்பட்ட 8பேர் உயர் நீதிமன்றத்தில் சமீபத்தில் ஜாமீன் பெற்றனர். அவர்கள் முற்றாக விடுதலை செய்யப் படவில்லை, அவர்கள் விடுவிக்கப்படவுமில்லை. வழக்கு இன்னும் விசாரணையில்தான் உள்ளது. அவ்வாறிருந்தபோதிலும் டெல்லி ஐஐடி மற்றும் ஹார்வெர்ட் பல்கலைகழகத்தின் முன்னாள் மாணவரான சிவில் விமான போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் ஜாமீனில் வெளிவந்த அந்த 'குற்றவாளி'களுக்கு மாலை அணிவித்து கௌரவித்திருக்கிறார். பாஜக–ஆர்எஸ்எஸ் ஆளும் இந்தியாவில் கும்பல் படுகொலையென்பது ஒரு குழந்தை விளையாட்டு போலத்தான் என்பது அமைச்சரின் இந்நடவடிக்கை தெள்ளத்தெளி வாக்கியுள்ளது. ஜாமீன் கிடைக்கப்பெற்றவர் எவரும் விடுவிக்கப்பட்டவர் அல்ல என்பதால் அமைச்சர் தன்னுடைய இச்செயலை சட்டப்படி நியாயப்படுத்தமுடியாது. அதேபால பீஹாரில் வகுப்புக் கலவரத்தில் ஈடுபட்டதாக குற்றஞ் சாட்டப்பட்ட விஎச்பி மற்றும் பஜ்ரங்தள்ளைச் சேர்ந்தவர்களின் வீடுகளுக்கு சென்றதோடு, அமைதியை நிலைநாட்டுவதற்காக பாடுபட்டவர் களை போலீஸ் சித்திரவதை செய்கிறது என்றும் மற்றொரு மத்திய அமைச்சர் கூறியிருக்கிறார். உபி தாத்ரியில் அக்லாக் படுகொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட 18பேர்களில் சிறுநீரகம் மற்றும் மூச்சுகோளாறால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த ஒருவரின் உடலுக்கு தேசிய கொடியை போர்த்தியும்அவரது குடும்பத்தாருக்கு 8லட்சம் ரூபாய் இழப்பீட்டையும் வழங்கப்போவதாக அவ்வட்டார பாஜக எம் எல் ஏ அறிவித்திருக்கிறார். மறுபுறம், இவ்வாறான படுகொலைகளை மறைமுகமாகவும் நேரடியாகவும் நியாயப்படுத்தி சமூக ஊடகங்கள் விஷமத்தனமான புரளிகளைக் கிளப்பிவிடுகின்றன. இவையெல்லாம் ஒரு திகிலூட்டும் சூழ்நிலையை உருவாக்குகின்றன. இந்த கும்பல் படுகொலையின் கள யதார்த்தமும் விஷப் பிரச்சாரமும் பிரபலமான மத அடிப்படை வாதம் மற்றும் வெறிவாதத்திற்கெதிராக உறுதி யுடன் நின்ற பகுத்தறிவு, முற்போக்கு சிந்தனை யாளர்களான டாக்டர் நரேந்திர தபோல்கர், டாக்டர் கோவிந்த பன்சாரே, டாக்டர் எம் எம் கல்புர்கி, கௌரி லங்கேஷ் போன்றோரின் படுகொலையுடன் சேர்ந்துகொண்டன.

திகிலூட்டும் இந்தத் தொடர் கும்பல் படுகொலை குறித்து தலைமை நீதிபதியின் தலைமையிலான மூன்றுபேர் கொண்ட பெஞ்சானது, இந்த "படுபயங் கரமான கும்பல்வாதம்" நாட்டின் சட்டத்தை கீழ்படியச்செய்யும் "புதிய சகஜநிலையை" அனுமதிக்க முடியாது என எச்சரித்துள்ளது. இந்த கும்பல் படுகொலையை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய–மாநில அரசுகளுக்கு இந்த பெஞ்ச் அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் இவ்வழிகாட்டலுக்கு பாஜக அரசாங்கம் எவ்வளவு தூரம் செவிசாய்க்கு மென்பது போகப்போகத்தான் தெரியும். ஏற்கெனவே அச்சமூட்டும் அறிகுறிகள் தென்படுகின்றன. கும்பல் படுகொலை வழக்குகளை கையாள்வதற்கான வழிகாட்டுதல்களை மாநில நிர்வாகங்களுக்கு மத்திய பாஜக அரசாங்கம் வழங்கப்போவதாகக் கூறப் படுகிறது. ஆனால், நாம் முன்பே கூறியதுபோல் பாஜக ஆளும் மாநிலங்களில்தான் இத்தகைய கும்பல் படுகொலைகள் உச்சத்தை அடைந்துள்ளன. இத்தகைய மனிதத்தன்மையற்ற கொடூர செயல் களின்பால் மத்தியிலும் மாநிலத்திலுமுள்ள பூர்ஷ்வா அரசாங்கங்கள் இருதயமேயில்லாமல் பேய்த்தனமாக கண்டும்காணாதுமிருக்கின்றன என்பது சமீபத்தில் ராஜஸ்தான் ஆல்வாரில் நடைபெற்ற படுகொலைபோல் ஓய்வின்றி நடைபெறும் சம்பவங்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஜாமீன் கிடைத்துவிட்டதென்பதற்காகவே படுகொலையில் ஈடுபட்ட குற்றவாளிகளைப் பாராட்டுவது அல்லது மேலே கூறப்பட்டுள்ளது போன்ற செயற்பாடுகளெல்லாம் ஆட்சியிலிருக்கும் ஒரு கட்சியின் மோசமான மனோபாவத்தைத்தான் வெளிப்படுத்துகிறது, படுகொலைகளை தடுப்பதற் கான எவ்வித நடவடிக்கையையும் அக்கட்சி எடுக்கவில்லை என்பதைத்தான் வெளிக்காட்டுகிறது. டெல்லியில் நிகழ்ந்த கொடூரமான நிர்பயா நிகழ்வும் அதனைத் தொடர்ந்து பலாத்காரத்திற் கெதிரான சட்டங்களை வடிவமைப்பதும் அச்சட்டங்களை நிறைவேற்றுவதில் காட்டும் வேகத்தையும் நாட்டுமக்கள் இன்னும் மறக்க வில்லை. இவர்கள் மேற்கொள்ளும் காரியங்கள் எவ்வளவுதூரம் செல்லுபடியாகும் என்பதை கத்துவா, உன்னாவ், மான்ட்சோர் மற்றபிற பகுதி களில் தங்கள் உயிரைக் கொடுத்து மக்கள் அறிந்து கொண்டுள்ளனர். எனவே, என்ன செய்ய வேண்டும் என்பதற்காக எந்தவொரு பிரதான சக்தியின் வழிகாட்டுதலுமின்றி, அரசு–நிர்வாகத் தின்மீதும் சட்டத்தின் அமலாக்கத்தின்மீதும் முழு வதுமாக நம்பிக்கையிழந்து விதிவிட்ட வழி என்று பொதுமக்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒருபோதும் அவ்வாறிருத்தலாகாது.

### கும்பல் படுகொலை சிந்திக்கும் மக்களை கடும் மனவேதனைக்குள்ளாக்கியுள்ளது

மிக அதிகமாக நடைபெறும் இந்தக் கொடூரக் கும்பல் படுகொலைச் சம்பவங்கள் சில கேள்வி களை எழுப்புகின்றன. இப்படிப்பட்ட கும்பல்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## மிருகத்தனமான கும்பல் படுகொலை

# சமூக ஊடகத்தை தவறாகப் பயன்படுத்தி போலி வீடியோக்கள், புரளிகள் பரப்பப்படுகின்றன

6ம் பக்கத் தொடர்ச்சி

படுகொலைகள் எவ்வாறு தணியாது தொடர்ந்துகொண்டே இருக்கின்றன? இந்த வெறிபிடித்த கும்பல் எவ்வாறு துணிச்சலுடன் சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு தங்கள் இலக்கிற்குள்ளாவோரை சிறிதும் மனஉறுத்தலேதுமின்றி கொடூரமாகக் கொலைசெய்து அதை வீடியோ பிடித்து சமூக ஊடகங்களில் பரப்புகின்றனர்? ஒரு வாதத்திற்காக குழந்தை திருட்டு இருக்கிறதென்றே வைத்துக்கொள்வோம், அதுவே தங்கள் கையில் சட்டத்தை எடுத்துக்கொண்டு, அதுவும் சந்தேகத்தின் அடிப்படையில் அக்குற்றவாளிகளை கொலைசெய்யும் உரிமையை ஒரு கும்பலுக்கு வழங்கிடுமா? குற்றத்தில் இவர் ஈடுபட்டாரா இல்லையா என்பதை உறுதிப்படுத்த ஏன் இவர்கள் போலீஸிடம் விஷயத்தை ஒப்படைக்கமுடியாதா? "நூறு குற்றவாளிகள் தப்பிக்கலாம், ஆனால் ஒரேயொரு அப்பாவிகூட தண்டிக்கப்படக்கூடாது" என முதலாளித்துவ சட்டஇயலேகூட கூறவில்லையா? பிறகு எவ்வாறு தங்குதடையின்றி இப்படுகொலைகள் தொடர அரசாங்கங்கள் அனுமதிக்கின்றன? மறுபுறம் ஒரு நல்ல நோக்கத்திற்காக ஏதாவது தெரியாத இடத்திற்கு செல்வதைக்கூட அபாயத்திற்குள்ளாக்கக்கூடிய ஒரு நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். நிலைமையை எதிர்கொள்ள நிராதரவாக நிற்கும் மக்களுக்கு தலைமையேற்கவும் அவர்களை வழிநடத்தவும் யாருமேஇல்லை என்பது உண்மையில்லையா? படிப்பதற்காகவோ அல்லது தம் வாழ்வை காப்பாற்றிக்கொள்ள பொருளீட்டுவதற்காகவோ தங்கள் பிள்ளைகளை வெளியில் அனுப்பவே பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெற்றோர் அஞ்சுகின்றனர். 42வயது ஆண் பொறியாளர் ஒருவர் நோயுற்ற தன் சகோதரரைப் பார்ப்பதற்காக பர்தா அணிந்து தன்னை மறைத்துக்கொண்டு அலிகாரிலிருந்து டெல்லிக்குச் சென்றார்.

"இப்படி எங்களை ஒவ்வொருவராக கொலை செய்வதைக் காட்டிலும் ஹிந்துத்துவா நாடாக இந்த நாட்டை அறிவித்துவிட்டு எங்களையெல்லாம் ஒரேயடியாக விரட்டிவிடலாம்" என்று கும்பல் தாக்குதலிலிருந்து தப்பித்த அதிர்ஷ்டக்காரர் ஒருவர் புலம்பினார். வகுப்புவாத வெறுப்பு அதிகரிக்கும் சூழலின் தாக்கத்தின் காரணமாக சிறுபான்மை அல்லது தலித் சமூகத்தை சேர்ந்த ஒரு பிரிவினர் இந்த தாக்குதல்களெல்லாம் தங்களுக்கே நேர்ந்துவிட்டதாக உணருகின்றனர். எனவே இதுபோன்ற உணர்வுகளெல்லாம் கும்பல் வன்முறைகளை ஏவிவிடுவோரையே திரும்பத் தாக்கும் ஆயுதமாகமாறி அவர் எந்த மதத்தை சேர்ந்தவராயிருந்தாலும்சரி அவரைத் தாக்கும் ஒரு நிலை ஏற்படுவதையும் நாம் மறுத்துவிடமுடியாது. சந்தேகத்தின்பேரில் அஸ்ஸாமில் இரண்டு இளைஞர்கள் தாக்கப்பட்ட விஷயம் இதற்கு சரியான உதாரணமாகவிருக்கிறது. போலிச் செய்திகள், படங்கள், வீடியோக்கள், வாசகங்களை பரப்புவதன்மூலம் சமூக ஊடகமும் ஸ்மார்ட் போன்களும் அபாயம் ஏற்படுத்துவதில் பெரும் பங்காற்றுகின்றன. பிறகு எது காரணமாக இருக்கக்கூடும்? இவ்வாறான கொடூரங்களுக்கெல்லாம் எவ்வாறு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது? சமூகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும்பலர் பல்வேறு காரணங்களை அடுக்குகிறார்கள். "தொழில்நுட்பம் ஒரு எளிதான ஊடகமாக இருக்கிறது. கோபம், துருவமயப்படுத்தல், சட்டத்தின் ஆட்சி, வெறுப்பின் சமூக உற்பத்தி குறித்தெல்லாம் நிறைய கதைகள் சொல்லப்படுகின்றன.

... குற்றவாளிகள் தங்கள் கொடூரங்களை நியாயப்படுத்து வதற்காக சொல்லப்படுகின்ற பல்வேறு தார்மீக கட்டமைப்புகள் வன்முறை தூண்டல்களுக்கு தூபமிடுகின்றன. அவர்கள் பாடம் கற்பிக்க அல்லது பழிவாங்க விரும்புகிறார்கள்" (தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, கல்கத்தா–ஜூலை 22, 2018) என்ற கூற்றில் உண்மையின் ஒரு சிறு பகுதி இருக்கிறது. ஆனால், இதற்கப்பாலும் இவ்விஷயம் குறித்து சொல்ல பல அம்சங்கள் இருக்கின்றன.

### கடும் கலாச்சாரச் சீரழிவே இதன் ஆணிவேர்

பொருளாதார ரீதியாக மட்டுமல்ல, அனைத்து அம்சங்களிலும் முதலாளித்துவம் எவ்வாறு சாதாரண உழைக்கும் மக்களை சுரண்டுகிறதென்பதை மாபெரும் மேதை கார்ல் மார்க்ஸ் அவர்கள் வெகுகாலத்திற்குமுன்பே சுட்டிக்காட்டியுள்ளார். சீரழிந்து, சாகும் கட்டத்தை எட்டியவுடன் முதலாளித்துவம் மேலும்மேலும் ஈவிரக்கமற்றதாகிறது. அதன் நெருக்கடி சூழ்ந்த முடமாகிப்போன சுரண்டல்வர்க்க ஆட்சியை நீட்டித்துக்கொள்வதற்காக ஆளும் முதலாளிவர்க்கமும் அதன் சேவகர்களும் அனைத்துவகையான அழுகிய கேடுகெட்ட சிந்தனைகளுக்கும் தூபம்போட்டு, மக்களின் நுண்ணிய உணர்வுகளையும் மனித சாராம்சத்தையும் அழிக்கும் வழிகளை நாடி, மேலும்மேலும் தன்மைய (Self-centered) சிந்தனையில் மூழ்கடித்து சமூக பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கியிருக்கச்செய்து சக மனிதனின் உணர்வறியாதவர்களாக அவர்களை ஆக்கிவருகிறது. சிந்தனைரீதியிலான—முதலாளித்துவத்தின் இந்தத் தாக்குதலானது மக்களை விரக்தியுறச்செய்து, கையாலாகாத, அமைதியான சுயநலவாதத்திற்குள் அவர்களைத் தள்ளி தற்கொலைக்கும், அவ்வாறில்லாவிடில் இருதயமற்ற வெறுப்பு, நோக்கமின்மை மற்றும் கொடூரநிலையை உருவாக்குகிறது.

இந்த நாட்டின் மக்கள் கண்கவர் வண்ணங்களாலும் மெதுவாய் கொல்லும் விஷத்தாலும் சூழ்ச்சிகரமான கவர்ச்சியூட்டும் நடவடிக்கைகளாலும் பல்லாண்டுகளாக மூச்சுதிணறிவருகிறார்கள், இவையெல்லாம் ஈவிரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டலை தடையின்றி தொடரவே உதவுகின்றன. எந்த விஷயத்திலும் சமூகங்களுக்கிடையிலான செங்குத்தான பிளவு ஏற்பட்டு, சூழல் விஷமாகிவருவது மேலும்மேலும் ஆழமாகிவருகிறது. இந்தப் பின்னணியில், மனதின் போற்றிப் பாதுகாக்கப்பட்ட நுண்ணிய உணர்வுகள், கருணை, அனுதாபம், சரி தவறு குறித்த உணர்வு, நல்லது கெட்டது, நியாயமானது நியாயமில்லாதது என அனைத்தையும் இது துடைத்தழித்து வருகிறது.

இதுபோன்றதொரு சூழ்நிலைமையானது சரியாகச் சிந்திக்கும் பிரபலங்களிடம் தாங்கமுடியாத கலக்கத்தை ஏற்படுத்துகிறது. அமைதியிழந்தும் திக்குதெரியாமலும் இதுபோன்ற படுபயங்கர சூழ்நிலைமை உருவாவதற்கு எது காரணம் என்ற கேள்விக்கான விடையை அவர்கள் தேடுகிறார்கள். வெறும் கேள்வி மட்டுமே போதாது. இதற்கு உடனடியான விசாரணை தேவை. பொருளாதார, அரசியல், வகுப்புவாத தாக்குதல்கள் அனைத்தும் இருந்தபோதிலும் மக்களின் வாழ்விலிருந்தும் சமூகத்திலிருந்தும் நீதிநெறி, தார்மீக மதிப்புக்களின் அடிச்சுவடியையும் அழித்தொழிக்கும் சூழ்ச்சியின் காரணமாக கடுமையான கலாச்சாரச் சீரழிவு ஏற்பட்டதுதான் இத்தகைய நிலைக்குக் காரணமாகும். ஏற்கெனவே குடும்பங்கள் சிதைந்துவருகின்றன. அன்பு, பச்சாதாபம், நட்புணர்வு, பணிவு, பகுத்தறிவு, தனக்கு மேலுள்ளவர்களை தயக்கமின்றி ஏற்றுக்கொள்ளுதல் ஆகியனவெல்லாம் சமூகத்திலிருந்து மட்டுமல்ல, குடும்பத்திலிருந்துகூட துடைத்தழிக்கப்படுகிறது. கீழ்த்தனமான சுய இச்சைக்காக மனைவியையே கணவன் கொல்கிறான், அதேபோலவே மனைவி கணவனைக் கொல்கிறாள். தன் மகளையே தந்தை பலாத்காரம் செய்கிறான். அற்ப காரணங்களுக்காக மகன் தாயைக் கொல்கிறான். வாழ்நாளெல்லாம் கனவுகண்ட தம் குழந்தைகளாலேயே பெற்றோர் தெருவில் வீசியெறியப்படுகின்றனர். சேர்த்துவைத்த பெரும் செல்வத்தால்கூட சந்தோஷத்தையும் நிம்மதியையும் தரமுடியவில்லை. வாழ்க்கை வசீகரிக்கக்கூடியதாக இல்லை. வேலைக்கு, ஏன் உயிருக்கே உத்திரவாதமில்லை. இளையதலைமுறையினருக்கு எதிர்காலம் இருண்டதாகத் தோன்றுகிறது.

இவையெல்லாம் மேலும் அதிகரிக்க அதிகரிக்க, கடின வாழ்க்கை யிலிருந்து விடுதலைபெற மக்கள் மேலும் மேலும் முயற்சிக்கிறார்கள், நிம்மதியும் தீர்வுமிருக்கிறதென நம்பி தன்மையவாதம் (Self-centric), தனிமனிதவாத வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள்! ஆனால் அது அவ்வாறு நிச்சயமாக நடக்கப் போவதில்லை. ஒட்டுமொத்த சமூகமும் சீரழிவில் மூழ்கிவிட்ட போது தன்மையவாதம் எங்கிருந்து ஒருவரை காக்கப்போகிறது? இந்த விஷச்சூழல் மேலும் மேலும் சுழன்றுகொண்டுதானிருக்கும். உழைக்கும்

தொடர்ச்சி 8ம் பக்கம்

# சென்னை–சேலம் 8 வழிச் சாலையை எதிர்த்து அனைத்து விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கங்கள் சார்பாக சேலத்தில் மாநில அளவிலான ஆலோசனைக்கூட்டம்



சேலத்தில் எட்டு வழிச் சாலையை எதிர்த்து ஆகஸ்ட் 16, 2018 அன்று நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் அகில இந்திய விவசாய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் (ஏஐகேகேஎம்எஸ்) சார்பாக தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் தோழர் நடராஜன் உரையாற்றுகிறார்

## மிருகத்தனமான கும்பல் படுகொலை

# உன்னத கலாச்சார–தார்மீகத்தினடிப்படையில் முற்போக்குக் கலாச்சார இயக்கம் வளர்த்தெடுக்கப்படவேண்டும்

7ம் பக்கத் தொடர்ச்சி

வர்க்கப் புரட்சியின் அச்சத்தின் காரணமாகவும் தங்களுடைய அதிகாரம், பணத்தின் எல்லையற்ற பேராசையின் காரணமாகவும் எவ்வித மனிதத் தன்மையையும் மதிப்புக்கள், நீதிநெறியை ஒழித்து மிருகத்தனத்தில் ஒடுக்கப்படும் மக்களை ஆழ்த்த, சாகும்தருவாயிலுள்ள முதலாளித்துவம் இத்தகைய கலாச்சாரச் சீரழிவுகளை வளர்த்துத், தூண்டிவிடுகிறது.

இங்கே, ஒளிரும் சில உண்மைகளை நினைவு படுத்திப் பார்ப்பது அவசியமாகிறது. கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்பே பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் தலைவரும் இந்திய மண்ணின் ஒரே புரட்சிகர கட்சியுமான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யின் ஸ்தாபக பொதுச் செயலாளருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் வெல்லற்கரிய சில வார்த்தைகள்: "...எந்தவொரு உன்னதத் தத்துவமானாலும் அதன் உட்கருவானது அதன் நீதிநெறி, கலாச்சாரத் தரத்தில்தான் இருக்கிறது. நீதிநெறி, கலாச்சாரத் தரம் உயர்ந்ததாக இல்லையெனில், அவ்வுன்னத அரசியல் தத்துவத்தின் சித்தாந்த உட்கரு உண்மையில் உயிரற்ற உடலைப் போலாகிவிடும். உயிரற்ற ஒருடல் அது பார்வைக்கு எவ்வளவுதான் அழகாகத் தோன்றினாலும், பயனற்றது. அது அழுகி சமுதாயத்திற்கு தீங்கு விளைவிக்கும். அதுபோலவே உயர்ந்த சித்தாந்தத்தை ஒருவர் பேசுகிறார், ஆனால் உயர்ந்த நீதிநெறி, கலாச்சாரத் தரத்தை பிரதிபலிக்கவில்லையென்றால் அதுவும் சீரழிந்து சமுதாயத்திற்கு தீங்கு விளைவிக்கும் (ஃபாசிசமும் இடது ஜனநாயக இயக்கத்தில் தார்மீக நீதிநெறி நெருக்கடியும்: தேர்வு நூல் IV). தன் புரட்சிகர அரசியலின் இந்த உட்கருவை உய்த்துணர்ந்த நாட்டின் புரட்சிகர கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) யானது கொடூரமும் குழப்பமும் விரக்தியும் சூழ்ந்துள்ள நிலையிலும் அதிகரித்து வரும் கலாச்சாரச் சீரழிவை எதிர்த்து ஓய்வொழிவற்றுப் போராடிவருகிறது.

இதன்போக்கில், தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் நாட்டு இளைஞர்களுக்கு விடுத்த எச்சரிக்கையான மற்றொரு மதிப்பிடமுடியா போதனையையும் எமது கட்சி முன்னெடுத்துச் செல்கிறது: "நினை விருக்கட்டும், இந்த படுபாதாள கலாச்சாரச் சீரழிவானது சமுதாயத்தின் ஆன்மாவை குத்திக் குதறித் தின்றுவருகிறது. நாம் உணவின்றி, வேலையின்றி, தரம் தொடர்ந்து வீழ்ந்துவரும் கல்வியின்றி இருப்பது மட்டுமல்ல, தார்மீக, சித்தாந்த நெருக்கடியும் மக்களை குறிப்பாக இளைஞர்களைக் கவ்வுகிறது. எங்கும் பரவும் இக்கலாச்சாரச் சீரழிவை ஊக்குவித்தும் அதைப் பயன்படுத்தியும் ஆளும்வர்க்கம், சுரண்டல் பூர்ஷ்வா வர்க்கம் நாட்டின் தார்மீக முதுகெலும்பையே ஒடிக்க விரும்புகிறது. உயர்ந்த தார்மீக, சித்தாந்தத் தரத்தைப் பெற்றிருந்தால் மட்டுமே மனிதன் என்றழைக்கத்தக்க தகுதியுடன், தாங்கமுடியா துன்பங்களுக்கு மத்தியிலும் மக்கள் தலைநிமிர்ந்து நிற்கமுடியும். இந்த உயர்ந்த தரம் இல்லாதுபோனால் வெளித்தோற்றத்தில் மனிதனாகத் தோன்றினாலும் குணங்களெல்லாம் மிருகத்தை ஒத்ததாகவே இருக்கும். பூர்ஷ்வாக்கள் சுரண்டலில் மட்டும் ஈடுபடுவதில்லை, பேராசை, பயம், கோழைத் தனம், பின்னாலிருந்து ஒருவரை அழிக்கும் கோழைத்தனத்தில் ஈடுபடுவது, நோக்கமற்ற மூர்க்கத்தனத்தில் ஈடுபடுவது போன்ற தாழ்ந்த குணங்கள் மக்களைப் பற்றிக்கொள்ளச்செய்யும் சதிவேலைகளிலும் ஈடுபடுகிறார்கள்" (கலாச்சாரச் சீரழிவும் வேலையின்மைப் பிரச்சினையும்– தீர்வு எங்கே? என்ற 1973ம் ஆண்டு நிகழ்த்திய உரையிலிருந்து: தேர்வு நூல் III, பக் 301).

தற்போதைய இந்த கும்பல் படுகொலை குறித்து கவலையுறும் மக்கள் அதன் மூலவேரைக் கண்டுபிடிக்கவும் சக்திவாய்ந்த மக்கள் இயக்கத்தின்மூலம் அதை வேரோடு அழித்தொழிப்பதற்கான சரியான சித்தாந்த அடித்தளத்தையும் தோழர் சிப்தாஸ் கோஷின் இந்த மதிப்புமிக்க போதனை அளிக்கிறது.

### செயல்படாமையோ, வாக்கு அரசியலோ, கும்பல் படுகொலையைத் தடுக்காது: உயர்ந்த கலாச்சார, தார்மீக, நீதிநெறியின் அடிப்படையிலமைந்த கலாச்சார இயக்கத்தையே சூழ்நிலை வேண்டுகிறது

அதுபோன்ற இயக்கங்களை வளர்த்தெடுக்க அரசியல் கட்சிகளிடம் மக்கள் எதிர்பார்ப்பது இயற்கையே. ஏனெனில் மக்களின் கருத்துக்களையும் எதிர்பார்ப்புகளையும் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள்தான் அரசியல் கட்சிகள் என மக்கள் எண்ணுவர். மக்கள் நலனை உண்மையிலேயே பிரதிபலிக்கக்கூடிய, உண்மையிலேயே அவ்வாறிருக்கும் பட்சத்தில் அக்கட்சியை அடையாளங்காண அவர்களால் இயவில்லையென்றால் மக்கள் என்ன செய்கிறார்கள்? பெரிய கட்சிகளின் பின்னால் ஓடுகிறார்கள், அவர்களும் மக்களை ஏமாற்றுகிறார்கள். பின் தடுக்க ஆளின்றி கும்பல் படுகொலைகளெல்லாம் தொடரத்தான் செய்யும்.

தற்போது பாராளுமன்றத் தேர்தலுக்கான முரசு கொட்டப்பட்டுவிட்டது. பாராளுமன்றத்திலாகட்டும் அல்லது பொதுக்கூட்டங்களிலாகட்டும் பூர்ஷ்வா–குட்டி பூர்ஷ்வா கட்சிகள், அவர்களுடைய தலைவர்கள், தேசிய அல்லது பிராந்திய, பெரிய அல்லது சிறிய கட்சிகள் யாவும் மக்களை மகிழ்விக்க நாடகமாடுவார்கள், தங்களுடைய பரஸ்பர பழித்தூற்றல், குற்றஞ்சாட்டுதல், தம் தோள்களை தாமே தட்டிகொள்ளுதலுக்கு ஆதரவாக ஆவேசமாக முழங்குவார்கள். இவ்வமைப்பிற்குக் கீழ்படியும் அவர்களின் நிலையை நிறுத்திக் கொள்வது குறித்து எதுவும் சொல்வதற்கில்லை, மக்களுடைய தார்மீக முதுகெலும்பை அழிக்க அவர்களே எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறார்கள். முதலாளித்துவ அமைப்பும் ஆளும் முதலாளிவர்க்கமும் ஒரு தீர்மானகரமான திட்டத்துடன் கலாச்சாரச் சீரழிவை அரங்கேற்றிவருவதற்கெதிராக இக்கட்சிகள் உறுதியுடன் நிற்கும் என எதிர்பார்ப்பது பகல்கனவாய் முடியும். ஆனால் பெரிய இடதுசாரி கட்சிகள் என்றறியப்பட்ட கட்சிகளின் பங்கு மிகஅதிக கவனம் பெறுகிறது. இக்கட்சிகளெல்லாம் தம்முடைய அரசியல் நடவடிக்கைகளின் போக்கில், வாக்குவங்கி அரசியலால் வழிநடத்தப்பட்டு, யார் தங்களுக்கு அதிக சலுகைகளைத் தருவார்கள் எனத் தேடியலைவதிலேயே மக்களை வைத்துக்கொண்டு, ஒருகையில் கேரட் மறுகையில் குண்டாந்தடி எனும் கொள்கைகொண்டு வெட்கங்கெட்ட வகையில் சந்தர்ப்பவாதத்திலும் நடைமுறைவாதத்திலும் (Pragmatism) ஈடுபட்டுவருகிறார்கள். இந்த இடதுசாரிக் கட்சிகளெல்லாம் போதுமான அளவில் நேர்மையுடன் இருந்திருந்தால், மக்களின் தார்மீக முதுகெலும்பை அழிப்பதற்கான பூர்ஷ்வா, குட்டி பூர்ஷ்வா கட்சிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் முதலாளித்துவ சதியின் கசப்பான உண்மையை அங்கீகரித்திருப்பார்கள். உயர்ந்த சித்தாந்தம், உன்னதக் கலாச்சாரத்தினடிப்படையில் படிப்படியாக, ஒன்றன்பின் ஒன்றாக, மக்கள் வாழ்வின், வாழ்வாதாரத்தின் எரியும் பிரச்சினைகளின் மீதான வெகுஜன இயக்கங்களை துவக்குவது மட்டுமே முதலாளிவர்க்கத்தின் இச்சதியை முறியடிக்கும் ஒரே வழி என்பதையும் அங்கீகரித்திருப்பார்கள். இவ்வாறாக மட்டுமே மக்களுக்கு வழிகாட்டவும் கும்பல் படுகொலை போன்ற கேடுகளுக்கெதிராக எழுந்துநிற்கும் வலிமையையும் தைரியத்தையும் உறுதியையும் அளிக்கவல்லதொரு புதிய உன்னத கலாச்சார, தார்மீக, நீதிநெறியை ஸ்தாபிக்கமுடியும். இதுதான் இத்தருணத்தின் அவசரத்தேவை. ஆனால் யதார்த்தத்தில் என்ன நிகழ்கிறது? இக்கட்டான இச்சூழ்நிலையில் பிரதான இடதுசாரி கட்சிகளும் அவர்களின் கூட்டாளிகளும் இத்தேவையை நிறைவேற்றுவதற்கு பதிலாக பூர்ஷ்வா வாக்கு அரசியலில் ஈடுபட்டு, கும்பல் படுகொலை அல்லது அதுபோன்ற குற்றங்களை எதிர்த்து முணுமுணுக்கிறார்களேயொழிய வேறெதுவும் செய்வதில்லை. எனவே, தங்களுடைய செயலின்மை அல்லது போலி செயற்பாடுகளால் விஷயங்கள் அதன்போக்கில் செல்லட்டும் என விட்டுவிடுகிறார்கள்,

இத்தகைய நிலையில், தாங்களே உருவாக்கியுள்ள எங்கும் பரவும் கலாச்சாரச் சீரழிவை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஆளும்வர்க்கம் கும்பல் படுகொலை மற்றுமது போன்ற கொடூர விஷத்தை நாடுமுழுதும் பரப்பிவருகிறது. எதிர் கலாச்சார இயக்கத்தை கட்டவிழ்த்துவிடவேண்டியது இத்தருணத்தின் அவசரத் தேவையாகும். உயர்ந்த சித்தாந்த, உன்னத கலாச்சார நீதிநெறி தார்மீகத்தின் அடிப்படையிலமைந்த மக்களின் ஒன்றுபட்ட, அணிதிரட்டப்பட்ட முற்போக்குக் கலாச்சார இயக்கமே சமுதாயத்தில் ஆளும்வர்க்கம் விதைக்க முயற்சிக்கும் நஞ்சு சிந்தனைகள், பிற்போக்குதனங்களை வேரோடு அழித்தொழிக்கவல்லதாகும். அதுபோன்றதொரு இயக்கம் மட்டுமே சமூக சூழலை மாற்றி உன்னத மதிப்புக்கள், கலாச்சார உணர்வுகளை மக்கள் உட்கிரகிக்கச் செய்யும். கும்பல் படுகொலை அல்லது அதுபோன்ற மனிதஇனத்தின் எதிரிகளுக்கெதிரான இயக்கத்தை வலிமைபடுத்தும் என்பதில் சந்தேகமேஇல்லை. நிலைமை மக்களிடம் வலியுறுத்துவது இக்கடமையைத்தான், நாட்டின் மனிதத்தன்மையை பாதுகாப்பதற்காக அவர்கள் எதிர்பார்ப்பது சாதகமான பிரதிவினையைத்தான் ■



**ஆகஸ்ட் 11 குதிராம் போஸ் 110வது நினைவுதினம் தேனியில் அனுஷ்டிக்கபட்டது**

# மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரள மக்களுக்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் நிவாரணப் பணிகள்

வரலாறு காணாத மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரளாவுக்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) நிவாரணப் பொருட்களையும் நிதியையும் நாடு முழுவதும் திரட்டியது. கேரளா தோழர்களும் மீட்புப் பணியிலும் அவற்றைக் கொண்டு சேர்க்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

100 ஆண்டுகளில் இல்லாத அளவில் மிக மோசமான வெள்ளத்தை சமீபத்தில் கேரளா சந்தித்தது. ஜூன் ஆரம்பம் முதலே தென்மேற்கு பருவமழை தீவிரமாக இருந்தது, ஜூலை மாதம் வரை நல்ல மழை பெய்தது. ஜூலை கடைசியில் ஆறுகள் பெருக்கெடுத்து ஓடின, பெரும்பாலான அணைகள் 90% நிரம்பிவிட்டன. ஆகஸ்ட் 6 முதல் தொடர்ந்து 11 நாட்களுக்கு வரலாறு காணாத மழை கொட்டித் தீர்த்தது. ஆறுகள் அபாயக் கட்டத்தைத் தாண்டி ஓடின, தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. அணைகளும் மிக வேகமாக முழுக் கொள்ளளவை எட்டின. ஆகஸ்ட் 9இல் அணைகளில், குறிப்பாக மாநிலத்தின் மிகப்பெரிய அணையான இடுக்கி அணையின் நீர் இருப்பு அபாய கட்டத்தை எட்டியது. அணையையும் திறக்க வேண்டிய நிலை உருவானதால் பீதி உருவானது. ஆகஸ்ட் 10 முதல் ஒவ்வொரு அணையாகத் திறக்கப்பட்டது, இறுதியில் ஆகஸ்ட் 15இல் மடைக்கதவுகள் உள்ள 35 அணைகளிலும் மடைக்கதவுகள் திறக்கப்பட்டன. அணைகளில் நீர் திறப்பதற்கு தாமதமானது வெள்ள பாதிப்பை அதிகப்படுத்திவிட்டது. திடீரென அணைகளிலிருந்து அதிகப்படியான நீர் திறக்கப்படும் செய்தி மக்களுக்கு தெரியாது. உடனடியாக தங்களது அனைத்து உடைமைகளையும் விட்டுவிட்டு உயிருக்காக ஓடினர். கேரளாவின் 14 மாவட்டங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன, அதில் 8 மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. ஆகஸ்ட் 16 அன்று மாநிலத்தின் கால்வாசி பகுதிகளில் நீர் மட்டம் 4 அடி முதல் 17 அடிவரை அதிகரித்தது. ஆலுவா, செங்கன்னூர், சாலக்குடி போன்ற பகுதிகளில் சில இடங்களில் கட்டிடங்களில் 2வது மாடி வரை நீர் மட்டம் உயர்ந்தது. தாங்கள் வாழ்நாளெல்லாம் சேமித்தவற்றை அப்படியே போட்டுவிட்டு தங்கள் உயிரைக் காப்பதற்காக வீடுகளை விட்டு வெளியேறி நிவாரண முகாம்களில் மக்கள் தஞ்சமடைந்தனர்.

சாமானிய மக்களும் இளைஞர்களும் நிவாரணப் பணிகளில் குதித்தனர். ஆயிரக்கணக்கான மீனவர்கள் தங்கள் படகுகளோடு வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு விரைந்தனர், கடுமையான சிரமங்களையும் தாங்கிக்கொண்டு பல அடி ஆழமான தண்ணீரில் சிக்கித் தவித்த ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைக் காப்பாற்றினர். மீனவர்கள் உரிய நேரத்தில் செய்த மீட்பு நடவடிக்கைகளை பொதுமக்களும் ஊடகங்களும் வெகுவாகப் பாராட்டினர். வெள்ளத்தால் பொதுமக்கள் 500 பேர் இறந்துவிட்டதாகவும் 10 லட்சம் பேர் நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்ததாகவும் செய்திகள் தெரிவித்தன.

தொடர்ச்சி 10ம் பக்கம்

## கேரள மக்களுக்குத் துணை நிற்போம்

## தமிழ்நாட்டில் நிதிதிரட்டல்




















## பல்வேறு மாநிலங்களில் நிதிதிரட்டல்













# மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரளாவில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஆற்றிய நிவாரணப் பணிகள்

9ம் பக்கத் தொடர்ச்சி

30,000 வீடுகள் முழுமையாகவோ அல்லது பெருமளவோ சேதமடைந்துவிட்டதாக கணக்கிடப் பட்டுள்ளது. வெள்ளத்தால் ஏராளமான பயிர்கள் நாசமாகிவிட்டன, சாலைகள் இன்னபிற கட்டமைப்புகள் சின்னாபின்னமாகிவிட்டன. மொத்த பாதிப்பின் மதிப்பு 35,000 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மனிதகுலத்தின் அறைகூவலுக்கு செவிமடுத்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சித் தலைவர்களும் ஊழியர்களுடன் சேர்ந்து ஜனகேயா ப்ரதிரோதா சமிதி, மெடிக்கல் சர்வீஸ் சென்டர், பிரேக்த்ரூ சயின்ஸ் சொசைட்டி, அதேபோன்று ஏஐடிஎஸ்ஓ, ஏஐடிஒய்ஓ, ஏஐஎம்எஸ்எஸ், ஏஐயுடியுசியின் தன்னார்வத் தொண்டர்களும் உடனடியாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் குதித்தனர். மாநிலத்தின் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து நடத்துவதற்காக கோட்டயத்தில் மைய முகாம் அமைக்கப்பட்டது. வயநாடு, பாலக்காடு, திரிச்சூர், எர்ணாகுளம், கோட்டயம், ஆலப்புழா, பத்தினம் திட்டா உள்ளிட்ட வெள்ளம் பாதித்த மாவட்டங் களில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டனர். கட்சியின் மத்தியக் கமிட்டியின் அறைகூவலுக்கு இணங்க நிதிவசூல், நிவாரணப் பொருட்கள், மருந்துப் பொருட்களை சேகரிப்பதில் பல்வேறு மாநிலங்களில் தொண்டர்கள் ஈடுபட்டனர். கேரளாவில் 30 நிவாரண முகாம்களை கட்சி நடத்தியது. வெள்ளத் தால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து மீட்டு அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு, தேவைப் பட்டால், நிவாரண முகாங்களுக்கு செல்வதற்கு உதவினர். ஆகஸ்ட் 19 முதல் மெடிகல் சர்வீஸ் சென்டர் (எம்எஸ்சி) உதவியோடு பல்வேறு மாவட்டங்களில் மருத்துவ முகாம்களும் நடமாடும் மருத்துவ குழுக்களும் உருவாக்கப்பட்டன. இதில் கேரளாவைச் சேர்ந்த மருத்துவ அலுவலர்களோடு மேற்கு வங்கம், கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிராவைச் சேர்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள், துணை மருத்துவ அலுவலர்களும் சேர்ந்து பணியாற்றினர். பெரும்பாலான மருத்துவ முகாம்கள் கோட்டயம், ஆலப்புழா, பத்தினம்திட்டா, எர்ணாகுளம், திரிச்சூர் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகளையும் தெருக்களையும் சுத்தம் செய்தல், தேங்கிக் கிடந்த குப்பைகளையும் மணல் திட்டுகளையும் அகற்றுதல், மருந்துகள் தெளித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்ட தோழர்கள் நோய் பரவாமல் தடுப்பதற்காக சுத்தமாக இருக்குமாறும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் பிரச்சாரமும் மேற்கொண்டனர். உணவுப் பொருட்கள், துணிகள், மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள் போன்ற நிவாரணப் பொருட்களும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வழங்கப்பட்டது.

இம்முகாம்களுக்கான நிதியும், நிவாரணப் பொருட்களும், மருந்துப் பொருட்களும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தொண்டர்களால் நாடு முழுவதும், வடக்கே உத்திரகாண்ட் முதல் தெற்கே கர்நாடகா–தமிழ்நாடு வரையிலும், அசாம், திரிபுரா முதல் குஜராத் வரையிலும் திரட்டப்பட்டது. இதில் சில சம்பவங்களை குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

கர்நாடக மாநிலம் தார்வாடில், பக்ரித் நாளன்று எய்ட்கா மைதானத்தில் நமது கட்சித் தோழர்கள் கேரளா மற்றும் கொடுகு பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நிதி திரட்டிக் கொண்டிருந்தனர். அன்றைய நிதி வசூலை அவர்கள் முடிக்கும் தருவாயில் அவர்களை வந்து சந்தித்த அங்கே பிச்சை எடுத்துக்கொண்டிருந்த சில பெண்கள் தாங்கள் காலை முதல் பெற்ற தொகையை நிவாரண நிதியாக தோழர்களிடம் வழங்கினர். அந்த அடித்தட்டுப் பெண்களின் மனிதநேயத்தையும் சகோதர உணர்வையும் மதித்து நமது தோழர்கள் நன்றி தெரிவித்தனர். அதே போன்ற மற்றொரு சம்பவம் மேற்கு வங்கத்தில் உள்ள நாடியாவிலும் நடைபெற்றது. அங்கும் காலை முதல் தான் பிச்சை எடுத்து சம்பாதித்த பணம் முழுவதையும் ஒரு மூதாட்டி நிவாரண நிதியாக வழங்கினார்.











நாம் முதலில் குறிப்பிட்டபடி கேரளாவைச் சேர்ந்த மீனவர்களும் பாதிக்கப்பட்ட நிலையில் தங்கள் வாழ்வாதாரமான படகுகளை எடுத்துக்கொண்டு நிவாரணப் பணியில் ஈடுபட்டு ஏராளமான உயிர்களைக் காப்பாற்றினர். அதைப் பாராட்டி மாநில அரசாங்கம் அவர்களுக்கு நிதி உதவி அளிக்க முன்வந்தது. ஆனால் தங்கள் சொந்த மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அதற்கு உதவி செய்வது தங்கள் கடமை, எனவே அதற்காக நிதி பெறுவது தார்மீக ரீதியில் தவறு என்று கூறி அவர்கள் அரசாங்கத்தின் நிதி உதவியை ஏற்க மறுத்துவிட்டதாக வெளியான செய்தி நெஞ்சை உருகச்செய்தது. 2004 டிசம்பர் மாதத்தில் சுனாமி வெள்ளம் தமிழகத்தைப் புரட்டிப் போட்டபோதும், 2015 டிசம்பரில் தமிழ்நாட்டில் பெருவெள்ளம் ஏற்பட்டபோதும், கேரள மாநில மக்கள் தமிழக சகோதரர்களுக்கு உதவிக்கரம் நீட்டியதுபோலவே, சமீபத்திய கேரள வெள்ளத்தின்போது தமிழக மக்கள் கேரள சகோதரர்களுக்கு உதவிக்கரம் நீட்டியிருப்பது நாட்டு மக்களிடையே சகோதரத்துவ மனப்பான்மை எப்போதும் உயிரோட்டமாக இருப்பதையே சுட்டிக்காண்பிக்கிறது.





## கர்நாடக மாநிலம் கொடுகு பகுதியில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஆற்றிய நிவாரணப் பணிகள்






அதே நேரத்தில் இந்த சமுதாயத்தை தன்மைய–சமுதாயமாக (Self-Centred) மாற்றுவதற்கு முதலாளித்துவம் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருக்கும் சூழலில் மேலே குறிப்பிட்ட சம்பவங்களையும் சேர்த்து சாமானிய மக்கள் பெரிய அளவில் செய்த இந்த உதவியானது இருள் சூழ்ந்த உலகில் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாக இருக்கிறது ■

# ஜியோனிச இஸ்ரேல் ஆட்சியை "யூத மக்களின் தேசிய அரசாக" அறிவித்ததை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாகக் கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ், ஜூலை 22, 2018 அன்று வெளியிட்ட அறிக்கை:*

இஸ்ரேலிய பாராளுமன்றம் ஜூலை 19, 2018 அன்று தனது நாட்டை "யூத மக்களின் தேசிய அரசாக" அறிவிக்கும் மசோதாவை நிறைவேற்றிய பாசிச நடவடிக்கையை சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த மசோத யூத மக்களின் தாய் நாடாக இஸ்ரேலை அறிவித்து ஜெருசலேமை தலைமை நகரமாகவும் ஹீப்ரு மொழியை அதிகாரபூர்வ மொழியாகவும் தேசிய சுயநிர்ணய உரிமையை "யூத மக்களின் தனித்துவம் வாய்ந்ததாக" பறைசாற்றியது.

பல்வேறு மத நம்பிக்கைகள், பல்வேறு மொழிகள் மற்றும் பல்வேறு இனப்பின்னணி கொண்ட மக்கள் வாழும் நாடு இஸ்ரேல் ஆகும். இச்சூழ்நிலையில் சட்டபூர்வமாகவும் அதிகார பூர்வமாகவும் குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரின் அரசாக இஸ்ரேல் நாட்டை அறிவித்திருப்பது பிற சமூகத்தினரின் சமத்துவ அரசியல் சாசன உரிமைகளைப் பறித்துவிடும். இது யூதரல்லாதோர் மீது யூத மேலாதிக்கத்தை நிறுவவே உதவும்.

இஸ்ரேல் நாட்டின் 90 லட்சம் மக்களில் 20 சதவீதம் பேர் அரேபியர்கள் ஆவர். இஸ்ரேல் பாராளுமன்றத்தில் அரேபியர்கள் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் 1948இல் தமது நாட்டு எல்லைகளை எடுத்துக்கொள்ளப்பட்டு விட்ட பாலஸ்தீனர்கள் இந்த சட்ட முன்வடிவை "இனப்பாகுபாடு கொண்டது", இன வேற்றுமையைச் சட்டபூர்வமாக்குகின்றது என்றனர். யூத மக்களில் நன்கு சிந்திக்கும் குறிப்பிடத்தகுந்தோர் இந்த சதித்திட்டத்தை எதிர்த்தனர். ஆதலால்தான் 120 வாக்குகளில் வெறும் 62 வக்குகளே பெற்று குறுகிய வித்தியாசத்தில் மசோத நிறைவேற்றப் பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியமேகூட தமது கவலையை வெளிப்படுத்தியதோடு சிறுபான்மையினர்களின் உரிமைகளை மதித்திட வலியுறுத்தியது.

ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகரமாக ட்ரம்ப் அறிவித்ததுடன் அதை ஐநா சபை பெரும்பான்மை பலத்துடன் நிராகரித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் இந்தக்கருத்தை மதிக்காத யுஎஸ் அரசாங்கம் தனது தூதரகத்தை டெல் அவிவிலிருந்து ஜெருசலேமுக்கு மாற்றியது. இத்தகைய திமிர்த்தனம் இஸ்ரேலின் சர்வாதிகார அரசாங்கம் இந்த சமீபத்திய மசோதாவை நிறைவேற்ற தைரியம் கொடுத்தது.

இஸ்ரேல் இச்சட்டத்தைத் திரும்பப்பெறக்கூடிய வகையில் இந்திய அரசாங்கம் அதன்மீது அழுத்தம் தந்திட வலியுறுத்தும் அதே வேளையில், இஸ்ரேல் அரசாங்கத்தின் இந்த பாசிச நடவடிக்கையை உலகம் முழுவதிலுமுள்ள ஜனநாயக எண்ணம் படைத்தோர் எதிர்த்துக் குரலெழுப்பிடுமாறு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி அறைகூவல் விடுக்கிறது ■

# மக்களின் உண்மையான விடுதலையை வென்றெடுக்கும் தினமாக ஆகஸ்ட் 15 ஐ ஏஐடிஎஸ்ஓ அனுஷ்டித்தது




மதுரையில் ஆகஸ்ட் 15, 2018 அன்று மாணவர்கள் மத்தியில் நடைபெற்ற கூட்டத்தில் மக்களின் உண்மையான விடுதலையை வென்றெடுப்பது குறித்து அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தின் (AIDSO) மாநிலச் செயலாளர், தோழர் வால்டேர் உரையாற்றுகிறார்

**கட்சியின் 3வது காங்கிரஸையொட்டி தமிழ்நாடு மாநில மாநாடு**

**அக் 21–22, 2018 சென்னை**

**SUCI (Communist) சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)**

## ஆகஸ்ட் 5: பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்

# சிப்தாஸ் கோஷ் அவர்களின் நினைவுதினம்



கொல்கத்தாவில் ஆகஸ்ட் 5, 2018 அன்று நடைபெற்ற திறந்தவெளிக் கூட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), பொதுச் செயலாளர், தோழர் பிரவாஸ் கோஷ் உரையாற்றுகிறார். கொட்டும் மழையிலும் அவரது உரையை கேட்கும் மக்கள் திரள்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

TN/CCN/429/2018-2020
TN/PMG (CCR)/WPP-373/2018-2020
Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# சட்டப்பிரிவு 35–ஏ வை திரும்பப்பெறுவது காஷ்மீர் பிரச்சினையை மேலும் தீவிரமடையச் செய்யும்

*காஷ்மீர் தொடர்பான இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 35 –ஏ வை திரும்பப்பெறுவதற்கான ஆளும் பாஜகவின் முயற்சிக்கு கண்டனம் தெரிவித்து தோழர் பிரவாஸ் கோஷ், பொதுச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), 7 ஆகஸ்ட் 2018 அன்று வெளியிட்ட அறிக்கை.*

சுதந்திரம் பெற்ற உடனேயே பாகிஸ்தானால் தாக்குதலுக்கு ஆளான உடன் ஷேர்–இ காஷ்மீர் என்று அறியப்படும் போராட்டத்தலைவர் ஷேக் அப்துல்லா தலைமையிலான காஷ்மீர் மக்கள் இந்திய அரசாங்கத்துடன் இணைப்பு உடன்படிக்கை ஏற்படுத்தி காஷ்மீரை இந்தியாவோடு இணைக்க வேண்டும் என்று முடிவெடுத்தனர். அந்த மண்ணின் சில சிறப்பு அம்சங்களால் காஷ்மீர் மக்களுக்கு தன்னாட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்பது ஒரு முக்கியமான நிபந்தனையாக விதிக்கப்பட்டது, இதனால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பிரிவு 370வது சேர்க்கப்பட்டது. இதன் படி, ஜவஹர்லால் நேருவுக்கும் ஷேக் அப்துல்லாவுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. (இதன்படி உருவான ஒப்பந்தத்தில் ஜவஹர்லால் நேருவும் ஷேக் அப்துல்லாவும் கையெழுத்திட்டுள்ளனர்). ஆனால் ஆரம்பம் முதலே இந்த சரத்தில் கூறப்பட்ட விதிகளை மத்திய அரசாங்கம் மீறியதோடு மத்தியில் ஆட்சியிலிருந்த ஆளும் முதலாளித்துவ கட்சிகளான காங்கிரஸ் அரசாங்கமும் அடுத்து வந்த பாஜக அரசாங்கமும் தொடர்ந்து தங்கள் வல்லாதிக்கப்போக்கைக் கடைபிடித்ததால் காஷ்மீர் மக்களிடம் அதிருப்தியும் கோபமும் தொடர்ந்து அதிகரித்து வந்தது.

சட்டபிரிவு 370இன் ஷரத்துகளை அமல்படுத்துவதற்கு மாறாக காங்கிரஸ், பின்னர் பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கங்கள் கொடூரமான இராணுவ, துணைராணுவ ஒடுக்குமுறைகளை ஏவியதால் சிக்கலான சூழ்நிலைமை மேலும் மோசமாகிவிட்டது. இந்த சூழ்நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு சில பயங்கரவாதிகளும் பிரிவினைவாதிகளும் தலைதூக்கிவிட்டனர். கூடவே சட்டப்பிரிவு 370 ஐ நீக்க வேண்டும் என்ற பாஜகவின் கோரிக்கை பிரச்சினையை மேலும் அதிகரித்துவிட்டது.

மத்திய அரசாங்கம் ஜனநாயக கண்ணோட்டத்துடன் அரசியல் பேச்சுவார்த்தைகள் நடத்துவதை மேற்கொண்டால் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்பது எங்களது கருத்தாகும். மாறாக, இராணுவ அடக்குமுறையை அரசாங்கம் அதிகரிக்க அதிகரிக்க, மக்களது கோபமும் எதிர்ப்பும் அதிகரிக்கவே செய்யும். பயங்கரவாதிகளை ஒடுக்குகிறோம் என்ற பெயரில் அப்பாவி மக்கள் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர், படுகாயமுற்றுள்ளனர். இத்தகைய சூழ்நிலைமையில், நயவஞ்சக நோக்கத்தோடு சட்டப்பிரிவு 35–ஏ வை நீக்கவேண்டும் என்ற பாஜகவின் கோரிக்கையால் தங்களது செல்வங்களையும், சொத்துக்களையும், உரிமைகளையும் இழந்துவிடுவோம் என்ற அச்சத்திற்கு காஷ்மீர் மக்கள் ஆளாகியுள்ளதால் எதிர்ப்பு மேலும் அதிகரித்துள்ளது. காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வர மத்திய அரசாங்கத்தை நிர்பந்திப்பதற்காக பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து வெகுஜன இயக்கங்களைக் கடியெழுப்ப முன்வருமாறு அனைத்து இடதுசாரி–ஜனநாயக கட்சிகளையும், அமைப்புகளையும், நல்லெண்ணம் கொண்ட மக்களையும் அறிவுஜீவிகளையும் நாங்கள் அறைகூவி அழைக்கிறோம்.

1. சட்டப்பிரிவு 370 ஐ முழுமையாக அமல்படுத்து
2. ஷரத்து 35–ஏ வை திரும்பப்பெறும் கோரிக்கையைக் கைவிடு
3. இராணுவ, துணைராணுவ ஒடுக்குமுறையை நிறுத்து, அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண்க

தூண்டுதலுக்கும் குழப்பத்திற்கும் பலியாகாமல் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இயக்கத்தை வளர்த்தெடுப்பதற்கு ஏதுவாக காஷ்மீர் மக்கள் இந்தியாவின் ஜனநாயகபூர்வ மக்களோடு ஒற்றுமையாக இருக்குமாறும் காஷ்மீர் மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறோம் ■

## மனித உரிமை செயல்பாட்டாளர்கள் கைது – பாசிச நடவடிக்கை

*தோழர் பிரவாஸ் கோஷ், பொதுச்செயலாளர், எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்), 29 ஆகஸ்ட் 2018 அன்று வெளியிட்ட அறிக்கை:*

பீமா–கொரிகோன் சம்பவத்தோடு தொடர்பு என்று கூறி பாஜக தலைமையிலான மகாராஷ்டிரா அரசாங்கத்தின் காவல்துறையும் நிர்வாகமும் நடத்திய ஜனநாயகத்திற்கு விரோதமான சோதனைகளும் மூத்த மனித உரிமை மற்றும் சமூக செயல்பாட்டாளர்களைக் கைது செய்த நடவடிக்கை என்பது, எதிர்ப்புக் குரலை ஒடுக்கி, போராடும் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் பாசிச நடவடிக்கை என்பதால் அது வன்மையான கண்டனத்திற்கு உரியதாகும். கைது செய்யப்பட்டுள்ள அந்த மனித உரிமைகள் மற்றும் சமூக செயல்பாட்டாளர்களை உடனடியாக நிபந்தனையின்றி விடுதலை செய்ய வலியுறுத்துகிறோம் ■

# எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)இன் 3வது கட்சி காங்கிரஸை வெற்றிபெறச் செய்வோம்!

**பிரதிநிதிகள் கூட்டம்**
**நவம்பர் 21–25, 2018**
**காட்ஷிலா, ஜார்க்கண்ட்**

**திறந்தவெளிக்கூட்டம்**
**நவம்பர் 26, 2018**
**ஜாம்ஷெட்பூர், ஜார்க்கண்ட்**

சிறப்புரை: தோழர் **பிரவாஸ் கோஷ்**
(பொதுச்செயலாளர்)

தலைமை: தோழர் **சத்யவான்**
(மத்திய கமிட்டி உறுப்பினர்)

உரையாற்றுவோர்: தோழர் **ராதாகிருஷ்ணா**
(மத்திய கமிட்டி உறுப்பினர்)

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor : A Rengasamy**
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**